திருவள்ளுவர் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா


# குடி அரசு


| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மலர் 3. | ஈரோடு, ருதிரோத்காரி பங்குனி மீ 13உ. (25—3—28) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 48



இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் சித்திர வேலை செய்யப்பட்ட லிவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேல்சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

---

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனும்.



நூதனமாக வடிவமைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
8, பார்க் டவுன், (அ) சென்னை.

---

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

## முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதுங்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

---

டேபில் டைம்பீஸ் இனும்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடியதும் அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு பேர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

---

முன் விலை ரூ. 14 இப்போது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழரைட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

---

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

---

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் மேலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை நீண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—6—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

---

இனும்! இனும்!!

சாவித்திரி சத்தியவான் சம்பாஷணை 'இழவன் குமாரன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புஸ்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

---

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று எவரும் சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## ஆநந்த குண போதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலயாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான் 5000—சந்தாதார்கள்உள்ளது வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரிக்கு இலவசம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## திருக்குறள்.

கைடக்கமானது 300 பக்கங்கொண்டது
கண்கவரும் உயர்ந்த பதிப்பு
அடக்க விலை ½ அணா

31—3—28க்குள் ஒரு ரூபாயுக்கு குறையாமல் முன் பணமனுப்பி பிரதிகளுக்கு பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

புத்தகம் விபவ ஆண்டுச் சித்திரை திங்கள் முதல் நாள் 13 4—28ல் வெளிவரும்.

ரூபா ஒன்றுக்கு 8 பிரதிகள்
வ. திருவரங்கம் பிள்ளை
அமைச்சர்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் Ltd
6 பவளகாரத் தெரு, சென்னை

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}''$ x $2\frac{1}{2}''$ ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரம்மசமாஜம், ஜி. டி. மதராஸ்.

## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதுர், வக்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திரரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம், ஆகஇத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம் புதுவை
(பிரான்ஸ்இந்தியா)

முந்துங்கள்! முந்துங்கள்!!

## 'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்தியப் பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு மேலும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தாக்கி எழுதியிருக்கும் புரட்டுப் பரான புஸ்தகத்தின் சுத்த மொழிபெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த வைண்டு

புஸ்தகத்தின்மேலில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 3—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் சினேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரோந்த வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய டை. கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

ஸ்ரீ கிருஷ்ணா ஏஜன்ஸி.
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதிராஸ்

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னடிஸ மெஸ்மரிஸ மென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது, இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், ஆத்ம சக்தி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பெக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்

# உண்மை மதத்தை வெளிப்படுத்துவதே 'குடி அரசின்' பிரசாரம்.

(கைவல்யசாமியார் எழுதுவது)

கட்டுரை 5.

'குடி அரசின்' கொள்கையும் அதன் பத்திராதிபரின் பிரசாரமும் உங்களுக்குத் தெரிந்ததே. அதில் எந்த விதமான பொய்யோ மறை பொருளோ இருக்கக்காரணமில்லை. அவை பிரத்தியக்ஷத்தில் எல்லார் புத்திக்கும் படும்படியாயும், அனுபோகத்தில் எதிர் நிற்பவையாகவுமே யிருக்கின்றன. இப்பொழுது சர்வ மத சகோதர சங்கம் என்னும் பேரால் 'குடி அரசை'க் குற்றம் சொல்ல புறப்பட்டிருக்கிறார்கள். இதில் யார் யார் கலந்திருக்கிறார்கள், கலக்காமல் தூர நின்று யார் தூண்டி விடுகிறார்கள், பார்ப்பனப் பத்திரிகையில் வெளி வாராமல் 'தமிழ் நாடு' பத்திரிகையில் மட்டும் ஏன் வெளி வருகிறதென்கின்ற விஷயங்களுக்கு எத்தனை காரணமிருந்தாலும் இங்கும் பார்ப்பானின் சமயோசிதமும் நம்மவர்களின் கோபமும் அவசரமுமே காரணமென்றே சொல்லவேண்டும். எந்தக் காரியம் எக்கேடுகெட்டுப்போனாலும் தன் காரியத்தைத் தனக்கு அனுகூலமாகச் செய்துகொள்ளுவது பார்ப்பானின் புத்தியிலுள்ள சாமர்த்தியம். உள்ள காரியங்களைக் கவனியாமல் முன்னால் தோன்றுவதிலேயே யூகமும் கோபமும் கொண்டு பின் காரியங்களைக் கெடுத்துக்கொள்ளுவது நம் புத்தியிலுள்ள மூடுபனி. சர்வமத சகோதர சங்கத்திற்கு முன்னாலும் பின்னாலும் இருக்கிறவர்கள் யாராயிருந்தாலும் இருக்கட்டும். அவர்கள் வெளியீடும் 'குடி அரசின்' பிரசாரமும் தமிழ் நாட்டின் முன்னால் நிற்கிறது. இவைகளுக்கு சன சமூகமே தீர்ப்புக்கூற வேண்டும். சங்கத்தின் வெளியீட்டுக்குக் 'குடி அரசு' அநேக இடங்களில் பதில் சொல்லியிருக்கிறது. சங்கத்தின் வெளியீட்டால் மறைந்து கிடக்கும் அநேக விஷயங்கள் 'குடி அரசை' ஆதரிக்கும் எங்களுக்கு ஞாபகத்திற்கு வரும். அதையும் 'தமிழ் நாடு' தெரிந்து கொள்ள ஏதுவாகும். அந்த அளவில நாங்களும் சங்கத்தை வரவேற்கிறோம்.

சர்வமத சகோதரத்துவம் நம் நாட்டில் நிலைத்திருக்கவேண்டும். ஆனால் அது இந்து மத ஏற்பாட்டினாலும் வழக்கத்தினாலும் கொடுமையாலும் வித்தியாசப்பட்டிருக்கிறது. சகோதரத்துவம் நிலைத்திருக்கவேண்டுமானால் மதத்திலுள்ள வித்தியாசங்களும், அதை ஒட்டி எழுதி வைத்திருக்கும் ஆபாசக் கதைகளும், அதைக்கொண்டே உயர்வு தாழ்வு கற்பித்து வயிறு வளர்க்கும் ஏமாற்றுதலும் தொலைய வேண்டுமென்பதே 'குடி அரசின்' கொள்கையும் நாயக்கரின் பிரசாரமும் ஆகும். துருக்கியிலிருக்கும் முகமதியரோ முகமதிய குருவோ, இந்தியாவிற்கு வந்தால் இங்குள்ள முகம்மதியர்களை சகோதரர்களாகப் பாவிக்கிறார்கள். ஒரே தட்டில் உண்கிறார்கள். ஜப்பானிலிருக்கும் பௌத்தன் பர்மாவிற்கு வந்தால் ஜப்பான் பௌத்தனும் பர்மாபௌத்தனும் ஒன்றாய்விடுகிறார்கள். அதுபோலவே, கிருஸ்துவர்களும். இந்த மதஸ்தர்கள் அவரவர் மதத்திற்குள் விவாகமும் செய்து கொள்ளுகிறார்கள். தேசாச்சாரமோ மதாச்சாரமோ சிவில் சட்டாச்சாரமோ தடுப்பதில்லை. இந்து மதத்தின் உயர்வை காண்பிக்க வேதாந்த தத்துவம் பேசினாலும், தேசாச்சாரம், மதாச்சாரம், வழக்காச்சாரம், தெய்வச்சாரம், குருவாச்சாரம் முதலிய பல புத்திக்கும் மனதிற்கும் எட்டாத ஆசாரங்கள் இந்து மதமாகச்சொல்லி சகோதரத்துவத்தை பாழ்பண்ணுகின்றன. அப்படிப்பட்ட இந்துமதம் ஒழிந்து எல்லாம் கடவுள் மயம், எல்லாம் கடவுள் பிள்ளைகள், கடவுளுக்கு வித்தியாசமில்லை, அகண்டாகார சிவபோகம் எங்கும் நிறைந்திருக்கிறது. எல்லாரும் வாயிலே உண்ணலாம் எல்லாரும் சகோதரர்கள் என்கிற உண்மையான இந்து மதமுண்டாக வேண்டுமென்பதே 'குடி அரசின்' பிரசாரம்.

எல்லாம் பிர்ம சொரூபம் என்னும் உயர்ந்த தத்துவத்தை அடக்கிக்கொண்டிருக்கும் இந்து மதங்களில் உயர்ந்த தத்துவங்களையுடைய வேதாந்த மத குருவான சங்கராச்சாரி பார்ப்பானுக்குத் தவிர மற்றவர்களுக்கு தீர்த்தப்பிரசாதம் கூட கொடுப்பதில்லை. அவர் மதத்தைச்சேர்ந்த பார்ப்பனர்களுக்குத்தான் அதிக வித்தியாசம். காரணம் கேட்டால் சங்கராச்சாரி கர்மத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார் என்கிறார்கள். சங்கராச்சாரியின் ஜாதியாரான நம்பூதிரிப்பார்ப்பனர்கள் பார்ப்பாரஜாதியில் உயர்ந்தவர்கள். அநேகமாக எல்லாரும் வேதாந்த மதத்தை சேர்ந்தவர்களே. அவர்கள் நாயர் பெண்களிடம் மட்டும் ஏகபோகமாயிருப்பார்கள். அந்த இடத்தில் தீட்டில்லை. அங்கு மட்டும் அவர்களுக்கு சாஸ்திரப்படி பெண்ஜாதி புருடன் என்கிற பாவனையாம். இவர்களுக்கு பிறக்கும் பிள்ளைக்குத் தீட்டுண்டாம். தகப்பனென்ற பாப்பான் தொடமாட்டான். தொட்டால் குளிப்பார்கள். நாயர் பெண்களைத் தவிர எவ்வளவு இந்து சாஸ்திரம் படித்தவனையும், தேர்ந்தவனையும், தெரிந்தவனையுமிருந்தாலும், யாராயிருந்தாலும் அவனை தொடமாட்டார்கள். சில இந்துக்கள் இவர்கள் கண்ணில் காணவரப்படாது. சிலர் ஒரு பர்லாங்குதூரம் விலகவேண்டும், சிலர் பேசினால் கேட்கும்படியான தூரத்திலிருக்கவேண்டும், சிலர் கைக்கெட்டாத தூரத்திலிருக்கவேண்டும். இந்தமாதிரியே அங்கு குடியேறிய தென்தேசத்துப் பாப்பார்களுமிருக்கிறார்கள். இதற்குக் காரணம் கேட்டால் தேசாச்சாரமென்றும் சங்கரர் ஏற்பாடென்றும், இதற்கு அனுசாரணையாக சில சுலோகங்களைச் செய்து சொல்லி சாஸ்திரமென்றும் சொல்லுகிறார்கள். நம்பூதரிப் பாப்பார்களும் அங்கிருக்கும் பாப்பார்களும் நாயர்பெண்களை சம்மந்தமார்க்கமென்றும் கலியாணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப்பெண் ஜாதியிடம் எந்தவிதத் தீட்டும் எச்சிலும் மல மூத்திர அருவருப்புமில்லை. ஆனால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தீட்டு! இவை இந்து சாஸ்திரத்தின் விதி! இந்த இந்து சாஸ்திரம் எப்படி சகோதரத்துவத்தை உண்டுபண்ணும்! தன் ரெத்தமான பிள்ளையிடம் தீட்டுக்கண்டு தொடாமலிருக்கும் குருவும், அவர் கூட்டமும், அந்த மதத்தைச் சேர்ந்த கோஷ்டிகளும், மற்ற மதஸ்தரிடமும், மற்றவர்களிடமும் சகோதரத்துவம் காண்பது எப்படி? பிள்ளையிடம் அன்புகாணத் தடுக்கும் மதஏற்பாடு பிறரிடம் அன்புகாண எப்படி இடம் கொடுக்கும்? அன்பைக்கெடுக்கக் காரணமாயிருக்கும் மதக்கோட்பாடுகள் ஒழியவேண்டுமென்று நாயக்கர் பிரசாரம் செய்தால், அதைத் தடுக்க ஏற்பாடும் சங்கத்தின எண்ணத்தைவிட கேவலமான எண்ணமிருக்க முடியுமா? எல்லாம் பிர்மம் என்று சொல்லப்பட்ட வேதாந்த மதமும் எல்லா இந்து கடவுள்களிலும் முக்கியமான காசிவிஸ்வேசுவரருமே—சங்கராச்சாரிக்கு தீட்டென்பதில்லை. உனக்கும் பறையனுக்கும் வித்தியாசமில்லை—என்று உபதேசிக்க அதைக்கேட்டு அஞ்ஞானம் தீர்ந்த சங்கராச்சாரியான குருவும் 'ஆத்மாவான என்னையும் அவ்வாத்மாவான் மற்றெல்லா வஸ்துக்களையும் கடவுளான நீ பிரகாசப் படுத்திக்கொண்டிருக்கிறாய்; அதனால் உலகம் க்ஷேமமடைகிறது' என்கிற மந்திரத்தைத் தினமும் ஜெபிக்கவேண்டிய பாப்பானும் மதத்தின் பேரால் பிள்ளையிடம் தீட்டுக்காணும் போது மற்ற இந்து மதப் பிரிவுகளில் வித்தியாசம் காண்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?.

'நாங்கள் வைணவர்களானதால் தீண்டாமையை ஒத்துக்கொள்ளமாட்டோம்; அவை ராமானுஜாச்சாரிக்கு நேர்விரோதம்; எங்கள் மதம்சமத்வமானஒரே கோஷ்டி, அதைப்பற்றி அநேக ஆழ்வார்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்று சொல்லும் வைணவர்கள் ஏழு திரைபோட்டு ஒன்பது கோணலாய் சாப்பிடுகிறார்கள். ஏ வைணவர்களே! உங்கள் தெய்வங்களுக்கும், ஆசாரிகளுக்கும் வித்தியாசமில்லையே. நீங்களேன் வித்தியாசப்படுத்துகிறீர்கள் என்று கேட்டால் 'ஆயிரமுடியோடுகூடி சூட்சும வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவுக்கு வித்தியாசமில்லை; விக்கிரகரூபமாக எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவிற்கு வித்தியாசமுண்டு. சூட்சுமலோகத்திற்குத்தான அந்த கொள்கை; இந்த லோகமான ஸ்தூலத்திற்கு இந்தக்கொள்கையே முக்கியவிதி. ஆசாரியசுவாமிகளும் அநேக இடங்களில் மறைவாக சொல்லியிருக்கிறார். இதெல்லாம் எப்படியிருந்தாலும் ஆசாரிகளைப்போல நாங்களும் அனுஷ்டித்தால் ஆசாரி தோஷம் வந்துவிடும்' என்று சொல்லுகிறார்கள். வைணவ நூல்களுக்கு அர்த்தம் செய்தவர்கள் வித்தையில் சாமர்த்தியமுடையவர்கள். அவர்களுக்கு உலக அனுபோகம் செவ்வையாகத் தெரியும். அந்த மதகுருக்களெல்லாம் அக்கிரமமும் ஆசையுமுடையவர்கள். அதனால் அவர்கள் செய்யும் தவறுதல்களை சிஷியர்கள் கண்டிக்காமலிருக்கவேண்டியே ஆசாரி தோஷம் கற்பித்திருக்கிறார்கள். அந்த மதக்குருக்கள் என்ன செய்தாலும் சிஷியர்கள் சொல்லமாட்டார்கள். சொன்னால் ஆசாரி தோஷம் வந்துவிடுமென்று முதல் முதலிலே எடுத்த எட்டிலெல்லாம் பாப்பான் எழுதிவைத்திருக்கிறான்.

சைவர்களோ ஜீவகாருண்ய மென்று கத்துகிறார்கள், ஒருவன் சைவ மதஸ்தனாகவிருந்தாலும் அவன் நோயாலோ இடறியோ விழுந்து யாத்திரை ஸ்தலத்தில் 'தண்ணி' என்று கதறினாலும் அவனைத் தொட்டால் தீட்டுவந்து ஆசாரத்தின் ஒழுக்கத்தைக் கெடுத்துவிடுமென்று பயந்து தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். தூக்குவதற்கு கிட்டையே போகமாட்டார்கள். பணக்காரனையும் பந்துவையும் தூக்குவது வேறு விஷயம். 'ஐயா, நீங்கள் சிவன் பக்கமிருந்து சிவதரிசினத்தால் அடையும் புண்ணியம் உங்களிடமேயிருக்கட்டும். அவை எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் தூரமாக நின்று சிவத்தை எட்டிப்பார்த்துக்கொள்ளுகிறோம்' என்றால் 'நீ பக்குவமில்லாதவன். ஊருக்கு வெளியிலிருந்து கோபுரத்தில் எழுதிவைத்திருக்கும் சிவனைப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பேரிலுள்ள கருணையால் எங்கள் மதப்பெரியவர்கள் பெரிய கோபுரம் கட்டிவைத்திருக்கிறார்கள்' என்கிறார்கள். 'ஐயா, சிவபெருமான் எங்கள் தேசத்திலேயே பிறந்து, எங்கள் ஜாதியிலேயே கூடிக்குலாவி, அவர் மகனான முருகனுக்குஎங்கள் கூட்டத்திலேயே கலியாணமும் செய்திருக்கிறாரே. அதையே சிவபெருமானுக்குப் பெருமையாக சமய குரவர்கள் பாடியுமிருக்கிறார்களே. நீங்கள் மட்டும் ஏன் எங்களைத் தள்ளுகிறீர்கள்' என்று கேட்டால், 'நீங்கள் சொல்லுவதெல்லாம் சரியே, கதைகளிலும், புராணங்களிலுமிருப்பது உண்மைதான். அவை பூர்வபக்ஷம், அது வேதயுக்தம், நாங்கள் சொல்லுவது சித்தாந்தம். சமய தீட்சைக்கு நாங்களே அதிகாரி, சமய குரவர்கள் பெரியவர்கள், அவர்களுக்கு எதுவும் சம்மதமாயி

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்கவும்)

# சமூகஊழியம்

சாமி சிதம்பரனார் எழுதுவது

கட்டுரை 2

## மக்களும் மதமும்.

மக்களும் மதமும் என்ற இப்பொருள் எளிதான பொருளன்று. இது பற்றி ஆராயவேண்டுமாயின் ஆழ்ந்த அறிவும், நடு நிலைமையான எண்ணமுமே வேண்டும். இச்செய்தியைக் கூறுகின்றவர்களை நாத்திகர்களென்று மதப்பித்துக் கொண்டோர் கூறுவார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் கடவுளென்று பற்பல உருவங்களையும், வேற்றுமைகளையுங் கற்பிக்கும் பொல்லாத மதங்களை நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. இச்செய்தியை வெளிப்படையாகக் கூறுவோரையும், எழுதுவோரையும், பின்பற்றுவோரையும், மதப்பற்றுடையவர்களும், மூட நம்பிக்கையுடையவர்களும் வெறுப்பார்களென்பது திண்ணம். நாமும் அத்தகையவர்களின் சினத்திற்கும், தூற்றுதலுக்கும் ஆளாவோமென்பதையும் அறிவோம். ஆயினும் நம்மனத்திலெழும் உண்மைகளை உரைக்கத்தான் வேண்டியிருக்கின்றது. உண்மையுரைப்பதனால் பொய்யர்கள்பாடு திண்டாட்டந்தான் என்பதை யாவரும் அறியவேண்டும். நாம் கூறப்போகும் கொள்கை புதிய கொள்கையென்று ஒருவரும் கருதவேண்டாம். அதுபண்டைக்காலமுதல் நமது நாட்டில் அறிஞர்களின் குழுவில் வழங்கி வரும் உண்மையான உயர்ந்த கொள்கையாகும். ஆனால் இக்கொள்கை எங்கும் பரவாமல் மறைபட்டிருப்பதற்குக்காரணம் மதங்களின் ஆர்ப்பாட்டங்களேயாகும். மக்களிடையில் அறிவு பெருகப்பெருக மதங்களின் ஆர்ப்பாட்டங்கள் அடங்கிப்போவது உறுதி. இதனைத் தற்கால உலகப் போக்கினால் அறியலாம். அறிவு மிகுந்த கல்வி பரவிய நாடுகளில் அத்துணைமதக்கொடுமைகள் இல்லாமலிருப்பதே இதற்குச்சான்றாகும்.

மதம் என்பதற்குக் கொள்கை என்பதே பொருளாகும். அக்கொள்கை தானும், மக்கள் தம்மறிவினால் ஆராய்ந்து ஏற்பன கொண்டு ஒழுகுவதைப் பொறுத்திருக்கின்றது. பிறக்கும்போது எவரும் எந்தக்கொள்கையுடனும் பிறக்கவில்லை. பிறந்து வளர்ந்து பகுத்தறிவு வாரப் பெற்ற பின்னரே எவரும் தமக்குட்சில எண்ணங்களை எண்ணியிருக்கின்றனர். அவ்வெண்ணத்தின்படி நடக்கின்றனர். அவ்வெண்ணங்கள்தான் மதம் என்ற பெயரால் அழைக்கப்படுவதாகும். ஒருவன் தான் எப்பொழுதும் பிறர்க்கு உதவி செய்துகொண்டே வாழவேண்டுமென்னும் கொள்கையை மேற்கொண்டு அவ்வாறே ஒழுகுவானாயின் அவன் மதம் உதவிமதமாகும். ஒருவன் பிறர்க்குத் தீங்கு செய்கையே தொழிலாகக்கொண்டு வாழ்வானாயின் அவன் மதம் கொடுமை மதமேயாகும். ஒருவன் திருட்டுத்தொழிலையே மேற்கொண்டு வாழ்வானாயின். அவன் மதம் திருட்டு மதமேயாகும். ஒருவன் கண்ட பொருளையெல்லாங் காமுற்று அவைகளைப் பெறுவதிலேயே தனது முயற்சியைச் செலவிட்டு வாழ்வானாயின் அவன் மதம், காமமதமேயாகும். மதம் என்பது கொள்கை என்றபொருளில் இக்காலத்து மதங்கள் வழங்கி வருகின்றனவாவென்றால் இல்லையென்றுதான் இயம்பவேண்டும். இக்கால மதப்பித்தர்களிற் பலர் மதமென்பது கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று கருதுகின்றனர். அது தவறாகும். கடவுளால் ஒரு கொள்கை உண்டாக்கப்பட்டிருக்குமாயின், அது எல்லா மக்களாலும் வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளக்கூடியதாகவே யிருக்கும். கடவுள் ஆளுக்கு ஆளே ஒவ்வொரு மதங்களையுண்டாக்கி மக்களைத் துன்புறுத்த மாட்டார். ஆதலால் மதமென்பன மக்களறிவினால் உண்டாக்கப்பட்டனவேயன்றி வேறல்ல.

இக்காலத்தினர் மதமென்பது பிறப்பினால் ஏற்பட்டதென எண்ணுகின்றனர். அவ்வாறு நினைப்பதற்கு அறியாமையும், குருட்டு நம்பிக்கையுந்தான் காரணமாகும். மதநூல்கள் சிலவும் இவ்வாறு கூறுகின்றன. ஒவ்வொரு மதநூல்களும், தங்கள் தங்கள் மதங்களிற் பிறக்க வேண்டுமாயின் பல கோடி ஆண்டுகள் பிற மதங்களிற் பிறந்து நல்வழியில் நடந்த புண்ணியத்தின் மிகுதியாலேயே பிறக்கவேண்டுமென்று கூறுகின்றன. இதனால் மக்கள் தங்களுக்கு மதம் பிறப்புரிமையென்று நினைக்கின்றனர். தங்கள் தாய்தந்தையர் மேற்கொண்ட மதமே தங்கள் பிறப்புரிமையான மதமென்று எண்ணுகின்றனர். அவர்கள் மதத்தையே தமது மதமெனக்கூறிக்கொள்ளுகின்றனர். இவ்வாறு கூறிக்கொள்வதில் ஏதாவது பொருளிருக்கின்றதாவென்று சிறிது உற்றுநோக்குவோமாயின் பொருளில்லையென்னும் உண்மையை உணரலாம்.

இனி எந்த மதத்தினராவது தங்கள் மத உண்மைகளை முற்றும் அறிந்திருக்கின்றார்களா என்று கேட்கின்றோம். எடுத்துக்காட்டாக இக்காலத்திய சைவமதத்தினரையும் வைணவ சமயத்தினரையும் எடுத்துக்கொள்ளுவோம். எந்தச் சைவராவது எந்த வைணவராவது தங்கள் மத உண்மைகள் முழுவதையும் உணர்ந்திருக்கின்றார்களா? அவர்களுக்கு சாம்பற்பூச்சுகளையும் பட்டை நாமங்களையும் அணியத்தெரியுமேயன்றி வேறென்ன தெரியும்? சாம்பலையும் மண்ணையும் குழைத்துப் பூசியவர்களைக் கண்டு "ஏனையா இவற்றை யணிந்திருக்கின்றீர்கள்?" என்றுகேட்டால் "எங்கள் மதம் இது, எங்கள் வழக்கம் இது, எங்கள் முன்னோர்கள் இவற்றை யணிந்துவந்தார்கள், நாங்களும் அதைப் பின்பற்றி நடக்கின்றோம்" என்றுதான் கூறுவார்கள். அவற்றை யணிவதற்கு சரியானபடி காரணங்கூறுவோர் ஆயிரத்தில் ஒருவராவது இருக்கின்றனரா? இல்லையே! இதனால் நாமறிவது யாதெனில் மதங்கள் கொள்கையின்றிமூட வழக்கத்தைப்பின்பற்றி நடைபெறுகின்றவென்பதோகும்.

முற்காலத்தில் மதங்களைத் தோற்றுவித்ததின் நோக்கம் மக்களுக்கு நன்மை செய்யும் பொருட்டாயிருக்கலாம். அம்மதங்களைத் தோற்றுவித்தவர்களெல்லாம் நம்மைவிடப் பேரறிவு படைத்தவர்களாயுமிருக்கலாம். ஆனால் அவர்களை அம்மதத்தலைவர்களைக் கடவுளென்று கூறுவதை நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம். அறிவுடைய எவரும் ஆராய்ந்தறிந்தால் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். "மதத் தலைவர்கள், அதாவது மதத்தைத் தோற்றுவித்தவர்கள் பேரறிஞர்கள் அவர்கள் மக்கள் மாண்பை யறிந்தவர்கள். மனித சக்தியை உணர்ந்தவர்கள். தமக்குள்ளிருக்கும் சக்தியின் பெருமையைத் தெரிந்து கொண்டவர்கள்" என்ற அளவில் தான் மதத்தலைவர்களை நாம் கொண்டாடலாம். போற்றலாம், அவர்கள் புகழைக்கூறலாம், அவர்கள் எல்லோரும் மக்கட் கூட்டத்தில் அன்பு தவழவேண்டும், ஒற்றுமை நிலவவேண்டும், வேற்றுமையொழியவேண்டும், இன்பந்ததும் வேண்டும், துன்பம் அகலவேண்டும் என்ற நன்னோக்கத்துடனேயே தங்கள் தங்கள் கொள்கைகளை உலகிற் பரவவைக்க முயன்றார்கள்; தங்களைப் பின்பற்றுமாறு மக்களை வேண்டினார்கள்.

ஆனால் அந்த மதத்தலைவர்களிற் சிலர் தங்கள் கொள்கைகளைப் பரவவைக்கும்பொருட்டு மற்றவர்களைக் கொடுமைப்படுத்தின தீய செயல்களை நாம் எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை. அந்த மதத் தலைவர்கள் தம் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களையும், தம் கொள்கையை மறுத்துரைத்தோர்களையும் அளவற்ற கொடுமைக்கு ஆளாக்கியிருக்கின்றார்களென்பதை நடுநிலையிலிருந்து ஆராய்கின்ற எவரும் ஒப்புக்கொள்ளுவார்களென்பதில் ஐயமில்லை.

தங்கள் மதத்தின்மீது கொண்டுள்ள பெரும்பற்றினால் பிறமதங்களைத் துன்புறுத்தினார்கள். துன்புறுத்தினார்கள் என்பதற்கும் இகழ்ந்தனரென்பதற்கும், பண்டைக்காலத்தில் நடந்தனவாகவும், இக்காலத்து நடப்பனவாகவும், எவ்வளவோ உதாரணங்கள் காட்டலாம், ஆயினும் சில உதாரணங்களையே நாம் இங்கெடுத்துக்காட்டுகின்றோம். முதலாவது சைவ மதத்தினரைப் பாருங்கள்! சைவமதத்தைப் பரப்புவதற்குப் பாடுபட்ட திருஞானசம்பந்தர் வேறு மதத்தினரான சமணர்களைக் கழுவிலேற்றிக் கொலைபுரிந்தாரன்றோ? இவர் எவ்வளவுதான் சிறந்தவராயிருப்பினும் இவர் செய்கை சீவகாருண்ணியமுடைய செய்கையாகுமா? தன்னையொத்த மக்களுயிரைவிட மதம் பெரிதா என்பதே நமது கேள்வி. இதுபோலவே வைணவ மதத் தலைவர்களும் பிற மதத்தினரை எவ்வளவோ துன்புறுத்தியிருக்கின்றனர். இங்ஙனமே புத்தர்களும் சீவகாருண்ணியத்தையே முதன்மையாகக் கொண்டவர்களாயினும், தங்கள் மதத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் பால் எள்ளளவும் இரக்கங் காட்டாதவர்களே யென்பதை வரலாறுகளாலறியலாம். இன்னும் வீரவைணவர்களைப்பற்றியும் வீரசைவர்களைப்பற்றியும் நினைக்கும்போதே நமது நெஞ்சந்திடுக்கிடுகின்றது. பிறமதத்தினரைக் கண்ணாற் காண்பதும் பாவமெனக்கருதும் அவர்களைவிடக்கொடியவர்கள் வேறுயாரிருக்கின்றனர்? இன்றும் ஒரு மதத்தவர்கள் மற்றவர்களை அஞ்ஞானிகள், ம்லேச்சர், நாஸ்திகர்களென்று இழித்துரைப்பதை இஞ்ஞான்றுங் காண்கின்றோம். பண்டை நாளில் யூத மதத்தினர்க்கும் கிறிஸ்துவ மதத்தினர்க்கும் நடந்தபோராட்டம் அளவற்றன. உரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் "புராட்டஸ்டெண்ட" கிறிஸ்தவ மதம் தோன்றிய காலத்தில் அக்கொள்கைகளைப் பரவச்செய்தவர்களையும், அக்கொள்கைகளைப் பின்பற்றியவர்களையும் படுத்திய கொடுமைகளுக்கும், செய்த கொலைகளுக்கும் கணக்குண்டோ? இக்கொடுமைகளை இன்றும் மேனாட்டு வரலாற்று நூல்களிற் காணுகின்றோம். மகமதியர்களுக்கும் மற்ற மதத்தினர்களுக்கும் யுத்தங்கள் பல நிகழ்ந்திருப்பதாக வரலாற்று நூல்களால் அறிகின்றோம். இன்னும் எந்த நாட்டு வரலாறுகளை யெடுத்துப் பார்த்தாலும், அந்நாட்டுக் கலகங்களுக்கு முதற்காரணமாக விருந்தது மதமென்பதை வரலாற்று நூல்வல்லார் யாவரும் அறிவார்கள். மதத்தின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் கொள்ளைகளும், கொலைகளும் கொடுமைகளும் நடைபெறாத நாடுகளே இல்லையென்பதை அறிஞர் யாவரும் அறிவார்கள்.

ஊன்றி நோக்குவோமாயின் மற்றவர்க்குத் தீங்கிழைக்காத மதம் உலகில் ஒன்றுமேயில்லையென்றுரைக்கலாம். எல்லா மதங்களிலும், கொடுமையும், வஞ்சமும், பொறாமையும், தீமையும் அமைந்திருக்கின்றன வென்று நாம் கூறுகின்றோம். இதைக்கூறுவதற்காக நம்மையாவரும் வெறுப்பார்களென்பது பற்றி நாம் அஞ்சவில்லை. ஆனால் எல்லா மதங்களிலும், நன்மையும், உண்மையும், அறமும், சீவகாருண்ணிய

இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—பாலகாண்டம்

## 6-ஆம் கட்டுரையின் தொடர்ச்சி.

திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.

விசுவாமித்திரன் பின்னரும் சொல்லத் தொடங்கினன்.

"அயோத்தியில் அரசாண்ட சகர மன்னனுக்கு கேசினிவயிற்றில் அசமஞ்சன் என்றொரு பிள்ளை பிறந்தான். சுமதி ஒரு கருப்பிண்டத்தைப் பெற அது வெடித்து அதிலிருந்து அறுபதினாயிரம் கருக்கள் வெளியாயின. அந்தக் கருக்கள் நெய்க்குடங்களில் இட்டு வளர்க்கப் பெற்றன. வெகுகாலஞ் சென்றபின் அக்கருக்கள் அறுபதினாயிரம் குழந்தைகளாயின. அசமஞ்சனுக்கு அஞ்சுமான் என்று ஒரு மகன் பிறந்தான். அசமஞ்சன் தீயவனானதால் ஊரிலிருந்து துரத்தப்பட்டான். ஓர்கால் சகரன் அசுவமேதயாகம் செய்யத்தொடங்கினன். யாகக் குதிரையைக் கெட்ட எண்ணங்கொண்டவனாகிய இந்திரன் ஓர் நாள் இராக்கத உருவங்கொண்டொருவருக்குந்தெரியாமல் திருடிக்கொண்டுபோய்விட்டான். அதைத் தேடத்தொடங்கிய அறுபதினாயிரவரும் கண்டவர்களையெல்லாம் திருடரென நினைத்து அடித்துத் தொந்தரவு செய்தார்கள். அதுகண்டு தேவர்களும் அசுரர்களும் மிகவும் பயம் கொண்டு நான்முகனைப்பார்த்து பூமிமுழுவதும் சகர புத்திரரால் பிளக்கப்படுகிறது. யாவரும் துன்புறுகின்றனர்' என்றனர். நான்முகன் 'அஞ்சாதீர் அவர்கள் கபில முனியால் சாம்பராக்கப்படுவர்' என்றனுப்பினன். அறுபதினாயிரவரும் பூமியையைத் தோண்டிக் கீழ்பூமிக்குப்போய் அங்கே கபில முனிவருகே குதிரையைக்கண்டு அவரைத் துன்புறுத்த அவர துசினத்தீயால் சகரர்கள்சாம்பலாயினர். அதனையறிந்த அஞ்சுமான் கபிலரைவணங்கிக் கொண்டுவரவும் யாகம் நிறைவேறிற்று. தனது பிள்ளைகளிறந்த வருத்தத்தால் வாடி அவர்களை உய்விக்கும் வழியைத்தேடி சகரன் முப்பதினாயிரம் ஆண்டு ஆண்டபின் இறந்தான். கருடனால் தனது சிறியதந்தையரை உய்விக்க வழி கங்கையைக்கொண்டுவருவதே என அறிந்த அஞ்சுமான் சிலகாலம் அரசாண்டு தனது மகன் திலீபனுக்குப் பட்டங்கட்டி முப்பத்தீராயிரமாண்டு தவம்புரிந்தும் கங்கையைக்கொணராமலே இறந்தான். திலீபன் முப்பதினாயிரமாண்டுகள் ஆண்டான். அவனாலும் கங்கையைக்கொண்டுவர முடியவில்லை. அவன் மகன் பகீரதன் பட்டத்துக்கு வந்தான். அவன் நான்முகனை நோக்கி ஆயிரம் ஆண்டுகள் தவம்புரிந்தனன். நான்முகன் பகீரதன் முன்தோன்றி 'இதோ கங்கை உன் எண்ணப்படி நடக்கக்காத்துக்கொண்டிருக்கிறான். கங்கையைத் தரிப்பதற்குச் சிவபிரான் ஒருவரே வல்லவர். ஆதலின் அதுபற்றி அவரைக்கேட்டுக்கொள்' என்று கூறி கங்கையையும் பகீரதன் விருப்பப்படி நடக்கச்சொல்லிவிட்டு மறைந்தான். உடனே பகீரதன் சிவபிரானை நோக்கி ஓராண்டு தவம்புரிந்தான். அவரும் மகிழ்ந்து தோன்றியருளினர். கங்கை சிவபிரானது சடையில் மறைந்தனள். பின் பகீரதன் வேண்டுதலால் ஒரு சிறிது விடப்பட்ட கங்கை ஏழு நதிகளாயினள். அவைகளில் மூன்று கிழக்கு முகமாகவும், மூன்று மேற்கு முகமாகவும் ஓடின. ஏழாவதாகிய கங்கை பகீரதன் பின் சென்று சகரபுத்திரர் அறுபதினாயிரவரையும் நற்கதிக் கேற்றினள்." இவ்வாறு கோசிகன் கூறக் கேட்டு மகிழ்ந்து இராமனும் இலக்குமணனும் துயின்றனர். விடிந்தவுடன் அவர்கள் கங்கையைக் கடந்து வடகரை யடைந்து விசாலை என்ற நகரைக்கண்டனர்.

மேலே கண்ட வரலாற்றை ஆராயுமிடத்து சுமதி என்ற பெண் வயிற்றிலிருந்து வெடித்த அறுபதினாயிரம் கருக்களும் நெய்க்குடத்தில் போடப் பெற்று வளர்க்கப்பெற அவை அறுபதினாயிரம் குழந்தைகளாயின என்ற வரலாறு மிகவும் வியப்பாகவும் இயற்கைக்கு மாறாகவும் இருக்கிறது. அறிஞர் மேலே காட்டப் பெற்ற விந்தையைச் சிந்திப்பாராக. அறிஞராகிய கம்பரே இவ்வியற்கைக்கு மாறான வரலாற்றைக் குறிக்காது அறுபதினாயிரம் குழந்தைகள் பிறந்தனர் என்று மட்டும் குறித்தனர். இக்கதையில் இந்திரன் இவ்வாறு சகரன்மீது பொறாமை கொண்டு அதன்பயனாக மிக இழிந்த செயலாகிய திருட்டினை வேற்றுருக்கொண்டு செய்வானானால் அவனுடைய குடிகளான தேவர்கள் எவ்வளவு கள்ளத்தனமுடையவர்களாக இருக்கவேண்டும்? இவர்களை ஒறுக்காது தெய்வம் அருளிற்றென்றால் அத்தெய்வத்தின் பெருமையை என்னென்பது? பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகிய கொலையை இந்திரன் செய்ததை முன்னர் கண்டோம், இப்போது மற்றொன்றாகிய களவு செய்ததைப்பார்த்தோம். இனி இவன் என்னென்ன செய்கிறானென மேலே காண்போம்.

இந்திரன் செய்த இக்களவு அறுபதினாயிரம் பேர்களின் அழிவில் முடிகிறது. அறுபதினாயிரவரும் கண்ட கண்ட பேர்களையெல்லாம் துன்புறுத்தினர். அதுகண்டு களவில் கைதேர்ந்த தேவர்களும் இந்திரனும் அஞ்சி நான்முகனையடைந்து காக்கவேண்டுகின்றனர். இத்தேவர்களின் வீரந்தானென்னே? இத்தீயோர்களுக்கு நான்முகன் தேர்தல் கூறுகின்றானும்! இதனால் இந்த நான்முகனைப்பற்றித்தான் யாது கூறுவது?

வால்மீக முனிவர் சகரன் முப்பதினாயிரம் ஆண்டுகள் ஆண்டானென்றும் அஞ்சுமான் சிலகாலமாண்டு பின் முப்பத்தீராயிரமாண்டு தவம் புரிந்தனனென்றும், திலீபன் முப்பதினாயிரம் ஆண்டுகள் ஆண்டானென்றும் கூறுகின்றனர். இவை நம்ப முடியாதவைகளாயுள. யோகிகளாயிருப்போர் யோகமகிமையால் நெடுங்காலம் வாழலாம். போகிகளாகிய இம்மன்னர் இவ்வளவு காலம் எவ்வாறு வாழ்ந்தனரோ? இவ்வாறு இவர்கள் நெடுங்காலம் ஆண்ட வரலாற்றைக் கம்பர் கூறாது அஞ்சுமானுக்குப்பின் அவன் வழியில் பகீரதன் தோன்றினன் என்கின்றனர்.

பகீரதனைப்பற்றிக் கம்பர் கூறும் வரலாறு வால்மீகியோடு மாறுபடுகிறது. பகீரதன் ஆயிரமாண்டுகள் நான்முகனைக்குறித்துத் தவம் செய்தான். நான்முகன் கங்கைக்கு உத்திரவு தந்த பின் பகீரதன் ஓராண்டு சிவபெருமானை நோக்கி தவம் புரிந்தனன் என்றார் வால்மீகி. கம்பரோ அவன் நான்முகனை நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகளும், சிவபெருமானைநோக்கிப் பதினாயிரம் ஆண்டுகளும், கங்கையை நோக்கி ஐயாயிரம் ஆண்டுகளும், திரும்பவும் சிவபெருமானை நோக்கி இரண்டாயிரமாண்டுகளும், மறுபடியும் கங்கையை நோக்கி இரண்டாயிரமாண்டுகளும் ஆக முப்பதினாயிரம் ஆண்டுகள் தவம்புரிந்தனனென்கின்றார். வால்மீகி ஆயிரத்தொரு ஆண்டுகளென்றதை இவர் முப்பதினாயிரமாகப் பெருக்கினார். ஒன்றை ஆயிரம் பதினாயிரமாகப் பெருக்கிக் கூறுவது கம்பர்போன்ற கவிகளின் திறமை போலும். நான்முகனை நோக்கி ஆயிரமாண்டு தவம் செய்தானென்று வால்மீகி கூறியதைப் பதினாயிரமாண்டென்றும், சிவபெருமானை நோக்கி ஓராண்டு தவம் செய்தானென்பதை இரண்டு தடவையாகப் பன்னிரண்டாயிரமாண்டென்றும் கம்பர் கூறுகிறார். மேலும் கங்கையை நோக்கித்தவம் செய்ததாகவே வால்மீகி கூறவில்லை. அப்படியிருக்க கம்பர் அவளை நோக்கி முதன் முறை ஐயாயிரமாண்டுகளும் பின் இரண்டாயிரமாண்டுகளும் தவம் செய்தான் பகீரதனெனக் கூறுகிறார். மேலும் கங்கையிலேயே சகரபுத்திரருக்கு உய்வென கருடன் அஞ்சுமானிடம் கூற அவன் அறிந்தனனென வால்மீகி கூறுகிறார். இதற்கு மாறாக கம்பர் அஞ்சுமானுடைய பேரனாகிய பகீரதன் தனது குருவாகிய வசிட்டனுடைய சொல்லின்படி நான்முகனை நோக்கி தவம் செய்ய நான்முகன் தோன்றி அவனிடம் கங்கையாலேயே சகரபுத்திரர் உய்ய வேண்டுமெனக்கூறினனெனப்புதுக்கதை கட்டினார். கங்கைபாதலஞ்சென்று அறுபதினாயிரம் பேர் நற்கதியடையச் செய்தவுடன் நான்முகன் தோன்றி பகீரதனைப் பாராட்டி அவனூருக்குப் போகும்படி கூறுகிறான் என்று வால்மீகி முனிவர் கூறுகிற கதையைக் கம்பர் கூறவில்லை. சிவபெருமான் கங்கையில் ஒரு பகுதியைச் சடையிலிருந்து கீழே விட்டவுடனே அது ஏழு நதிகளாக ஆயிற்று. அவைகளில் ஒன்றே கங்கை என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ கங்கை ஒன்றே சடையிலிருந்து வந்ததென்கிறார். இனி மேற் செல்லுவோம். இதுவரை கூறிய சகர வரலாறும் வால்மீகி முனிவருடைய பாலகாண்டம் 38, 39, 40, 41, 42, 43, 44 ஆகிய ஏழு சருக்கங்களில் கூறப் பெறுவது. இனி 45, 46, 47 ஆம் சருக்கங்களின் கதையைக் கவனிப்போம். அதுவருமாறு:—

விசாலை நகரத்தை விசுவாமித்திர முனிவன் அரசகுமாருடனடைந்ததும் இராமன் அவ்வூரின் வரலாற்றைக் கூறவேண்டினன். உடனே முனிவன் அவ்வரலாற்றைக்கூறினன்.

"இந்திரன் சம்பந்தமாக நடந்த கதையைச் சொல்லுகிறேன்கேள். இராமா! முன்பு கிருதயுகத்தில் திதி என்பவளுக்கு அசுரர்களும், அதிதி என்பவளுக்கு தேவர்களும் பிறந்தார்கள். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் என்னசெய்தால் சாவில்லாமலும் கிழத்தனமில்லாமலுமிருக்கலாமென்ற எண்ணமுண்டாயிற்று. அவர்கள் ஒன்றுகூடி அவ்வாறு எண்ணி பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வரும் அமுதத்தை உண்டால் அவ்வெண்ணம் முற்றுப்பெறுமெனத்தீர்மானித்துக் கடையத்தொடங்கினர். கடலிலிருந்து முதலில் தந்வந்திரியும் பின் அறுபதுகோடி அப்சரப்பெண்களும் தோன்றினர். அவர்களை ஒருவரும் கைப்பற்றவில்லை. பின் வாருணி என்றபெண் என்னையாராவது கைப்பற்றுங்கள் என்று கூவித்தோன்றினள்; அவளை தேவர்கள் கைபற்றினர். அவளைக்கைபற்றினதால் அவர்கள் மயிர்க்கூச்சடைந்து மிக மகிழ்ச்சியுடையவர்களாயினர்.


பிறகு ஒரு குதிரையும் கௌஸ்துபம் என்னும் மணியும் தோன்றியபின் அமுதமும் தோன்றிற்று. அவ்வமுதத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி தேவர்களும் அசுரர்களும் சண்டை தொடங்கினர். அசுரர்கள் பலர் கொல்லப்பட்டனர். திருமால் மோகினி உருவெடுத்து அமுதத்தைக் கொண்டுபோய்விட்டார். இந்திரன் அவரைப் பணிந்து அமுதத்தை வாங்கிக்கொண்டு அசுரர்களையும் கொன்று அரசு செலுத்தினன். பிள்ளைகளையிழந்த திதி வருந்தி தனது கணவனாகிய காசியபனையடைந்து தன்வருத்தங்களைக் கூறி இந்திரனைக்கொல்லவோர் மகனைத்தரவேண்டினள். அம்முனி அவளைத்தொட்டு தேறுதல் கூறி, 'நீ ஆயிரமாண்டு நல்லொழுக்கத்தோடு தவம் செய்தால் இவ்வேண்டுதல் நிறைவேறும்' என்றதும் அவள் மகிழ்ந்து தவம் செய்தாள். அவள் தவம் செய்கையில் இந்திரன் அவளுக்குத்தக்க பணி

இதன் தொடர்ச்சி 16 பக்கம் பார்க்க.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், மூப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம் மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும 25-8-23-ல் சென்னையில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன.

## தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்,

## பழனி ஆர். எம். கே.

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து!
மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை நோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும, பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்திவாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம, ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம, செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 100. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர் எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குகொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 80-வேளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம, தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும, மனத்திருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபோக அத்தாக்ஷியுடன் எடுத்தாக காட்டியிருக்கிறேன், தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது.) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்தியசாலை, பழனி

தந்தி விலாசம்:— "சித்தா" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

# பால்ய விவாகமும் பிராமணர்களும்.

திரு. மே. மாசிலாமணி முதலியார் எழுதுகிறார்.

—:o:—

சில ஆசாரியர்களும் வைதிகம் என்று வாய்பேசும் பிராமணர்களும் கூடி பால்ய விவாகம் சாஸ்திரீகமானது என்றும் இந்து மத சம்மந்தமானது என்றும் இதில் குயின் விக்டோரியா ராணியின் காலத்தில் ஏற்பட்ட உத்திரவுப்படி இராஜாங்கத்தார் மதசம்மந்தமான விஷயத்தில் பிரவேசித்தால் இந்துமதம் அடியோடு கெட்டுவிடும் என்றும் கூச்சலிடுவதை சகலரும் கவனித்திருக்கலாம்.

இந்து மதத்திற்கும் பால்ய விவாகத்திற்கும் எவ்வளவு தூரம் பொருத்தம் என்று சற்று கவனிப்போமாகில் இவர்கள் கூறும் பொய் வார்த்தைகள் சகலருக்கும் நன்கு விளங்கிவிடும்.

இந்து மதம் என்பது "பொதுவானது" இம்மதத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படுவோர்களில் எத்தனையோ பிரிவுகள் கிடக்கின்றன. அவற்றுள் பிராமணர் என்பவர்கள் 100-க்கு 3-பேர்களே இருக்கின்றார்கள். 3-பேர்களாயுள்ள பிராமணர்களும் மற்றும் பல ஜாதிகளாயுள்ள 97 பேர்களும் சேர்ந்தே இந்துக்கள் என்று வழங்கப்படுகின்றது.

இதில் 100-க்கு 3 பேர்களாயுள்ள பிராமணர்கள் மாத்திரம் மகமதியர்கள் அரசாண்ட காலத்திலிருந்து பெண்களுக்கு, 12 வயதுக்கு முன்பே விவாகம் செய்து கொண்டு வருகிறார்கள்.

ஏனெனில் அக்காலத்தில் "பூப்படைந்து" அதாவது பருவத்தையடைந்த ஒரு (அழகிய) பெண் விவாகமாகாமல் ஒரு வீட்டில் இருப்பதாய் தெரிந்தால் இராஜாக்களும் புஜபல பராக்கிரமமுள்ள புருஷர்களும் பலாத்காரமாய் அப்பெண்ணை தூக்கிச்சென்று விவாகம் செய்துக்கொள்ளுவது பழக்கத்திலிருந்ததாம்.

ஆனால் விவாகமாய்விட்ட பெண் என்று தெரிந்தால் ஒருவரும் தொடமாட்டார்களாம் இத்தகைய முறைகள் இராமாயணகாலத்திலும். பாரதகாலத்திலும்கூட இருந்ததாகவும் பலாத்கார விவாகம் நடந்திருப்பதாகவும் தெரிகிறது.

இராமாயண காலத்தில் புஜபலமுள்ளவனுக்கே சீதையைக்கொடுப்பது என்று நியமப்படி வில் வளைத்த புஜபலசாலிக்கே விவாகம் நடந்தது. பாரதத்தில் சித்திராங்கியைக்கண்ட அர்ச்சுனன் மோகித்து அதற்குமுன் எத்தனையோ மனைவிகள் தனக்கிருந்தும் அதை விடுத்து அவளுக்கு விவாகமாகவில்லை என்று விசாரித்து தெரிந்துகொண்டு பெண்ணின் தகப்பனிடம் சென்று தன்னுடைய புஜபலத்தையும் பெயரையும் கூறி பயமுறுத்தி அப்பெண்ணை மணந்து சிலகாலிருந்து விடுத்துச்சென்றதாய் ஆதிபர்வத்தில் கூறுவதால் அக்காலங்களிலும் இத்தகைய விவாகங்கள் நடந்திருப்பதாகவே தெரிகின்றது.

இக்காலத்திலும் சிலர் பால்ய விவாகம் அநுஷ்டித்து வருகிறார்கள் என்றாலும் 100-க்கு 3 பேர்களாயுள்ள பிராமணர்கள் மாத்திரம் தந்திரமாய் சாஸ்திரத்தில் கூறுகின்றது என்றும் அதற்கு அதற்கு வேண்டிய ஸ்லோகங்களை சில நூல்களில் சேர்த்து வைத்துக்கொண்டு அவைகளை அத்தாக்ஷியாகக் கொண்டுவந்து காட்டுகிறார்கள்.

இத்தகைய விதிகளை பலர் காலநிலை மாறியிருப்பதினால் (பிராமணர்கள் ஒரு ஜாதியார் தவிர) பிரிட்டிஷ் இராஜ்யத்திலுள்ள அனைவர்களும் பெண்களுக்கு வயது வந்தபிறகே விவாகம் செய்யும் முறையை அநுஷ்டித்துக் கொண்டு வருகிறார்கள்.

இப்போது 100-க்கு 97-பேர்கள் கையாண்டுவரும் விதியாகிய வயது வந்த பிறகு விவாகம் செய்யும் முறையையொட்டி சட்டசபையில் 16 வயதுக்குப்பின் விவாகம்செய்யவேண்டும் என்று சட்டம் செய்யும்படி கேட்கிறார்களே யொழிய வழக்கத்திலில்லாத ஒரு புதிய சட்டத்தைச் செய்யும்படி இராஜாங்கத்தாரைக் கேட்கவில்லை என்பதை வைதீக பிராமணர்கள் உணர்வார்களாகவும். ஒரு சமயம் மூன்று பேர்களாயுள்ள பிராமணர்களுக்கு இது புதிய சட்டமாய் இருக்கலாம். இருப்பினும் எனக்குத் தெரிந்தவரையில் பெருபாலர்களான பிராமணர்கள் சட்டம் செய்வதை ஒப்புக்கொள்ளக் கூடியவர்களாய் இருக்கின்றார்கள் என்றே சொல்லலாம். நிற்க நியாயமுறையில் பார்க்கில் இந்துக்களில் 100க்கு 97பேர்களாகிய பிராமணரல்லாதார்கள் ஒத்துக்கொள்ளும் போது மூன்று பேர்கள் மாத்திரம் நிராகரிப்பது முறையற்றதே. ஆகவே பிராமணர்கள் சகலர்களையும் சேர்த்து இந்து மதசார்பாக விவாக வயதை சட்டசபையார் நிர்ணயிக்கக் கூடாது என்று கூறுவது பொருத்தமற்றதும் கபடமானதும் சூதானதும் ஆகும் என்றே சொல்லவேண்டியது.

வேண்டுமானால் தங்களை இந்து மதத்திலிருந்து பிரித்து தனிப்பட்ட நிலையில் பிராமணஜாதியார்களுக்கு மாத்திரம் விவாக வயதை நிர்ணயிக்கவேண்டாம் என்று இராஜாங்கத்தைக் கேட்டுக்கொள்ளலாமே யொழிய அதைவிடுத்து இந்துக்களுக்கே வேண்டாம் என்று சொல்லுவது சரியான முறையன்று. வைதீக பிராமணர்களும் சங்கராச்சாரியாரும் சொல்லுவது யாதெனில், சாஸ்திரத்தில் கூறும் தர்ம விதிப்படி ஒரு கன்னிகையை ஒரு உத்தமவானுக்கு விதிப்படி விவாகம் செய்து கொடுப்பானானால் அந்தக்கன்னிகையின் தானத்தால் வானுக்கு ஆனந்தம் உண்டாகுமென்றும் ஷை வான் அப்பெண்ணால் பூலோகத்தில் உள்ள பெரிய இன்பசுகத்தை அடைகின்றான் என்றும், அதனால் உண்டாகும் பலன் கன்னிகையை தானம் செய்பவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் சேரும் என்றும், அவர்களுக்கு சொர்க்கலோகாதிபலன்களும் கிட்டும் என்றும் சொல்லுகிறார்கள். என்றாலும் நாம் அதை சற்று யூகிப்போமானால் இதன் உண்மை நன்றாய் விளங்கும். ஒரு புருஷன் தன்னிடத்திலுள்ள குழந்தைப் பருவமுள்ள பெண்ணை பெண்ணின் சுகத்தை விரும்பும்ஒரு வரனுக்கு தானம் செய்வானாகில் தானத்தைப் பெற்ற பெண்ணின் சுகத்தையடைய அவாக்கொண்டுள்ள வரன் எத்தனை காலம் பொறுத்து பெண்ணின் சுகத்தை அடையமுடியும் என்பதை கவனியுங்கள். ஒரு சமயம், தானம் பெற்ற பெண்ணை சில வருஷங்கள் வளர்த்து புக்த வயது வந்தபிறகு இன்பம் அநுபவிக்கும் காலத்தில் பெண்ணை தானம் செய்தவர்களுக்கு கன்னிகாதான பலன்கிடைக்கும் என்றாலும் அப்படி வயது வருமளவு காத்திருக்கும் காலத்தில் இருவரில் யாருக்கேனும் மரணம் சம்பவிக்குமேயானால் பெற்றோர்களுக்கு கூறும் கன்னிகாதான பலன் கிட்டாமற்போய்விடுமல்லவா.

பசியுள்ள ஒருவன் கேட்டபோதே பசியைத்தணித்து, அதனாலாம பயனை சம்பாதிப்பதை விடுத்து, அந்தகையோனுக்கு 'எங்கள் நிலத்தில் நெல் பயிர் முளைத்திருக்கின்றது அப்பயிரைத் தங்களுக்கு தானம் செய்கின்றோம். சிலநாள் காத்திருந்து அதனின்று உண்டாகும் அரிசியை கொண்டு பசியைத் தணித்துக் கொள்ளுவீர்களானால் அதினாலாம் பலன் எங்களுக்கு கிடைக்கும்; நாங்கள் புண்ணியசாலிகளாவோம்' என்று சொல்லுபவன் கதையைத்தவிர வேறென்னாகும். பசியுள்ளவனுக்கு தன்னிடமுள்ள ஆகாரத்தைத்தந்து பசியை தணிப்பதினால் எப்படி தானபலன் சித்திக்கும் என்று எப்படி எண்ணுவார்களோ அதுபோல காமப்பசி மேற்கொண்ட ஒருவனுக்கு அப்பசியைத் தீர்க்கும் வயது வந்துள்ள ஒரு கன்னிகையை தானம் செய்வானேயானால் கன்னிகாதான பலன் கிடைக்குமே யொழிய யோசனையற்ற வைதீகர்கள் சொல்லும் குழந்தைகளின் விவாகத்தால் கன்னிகாதான பலன் எப்படிக் கிடைக்கும் என்பதை யோசிப்பீர்களாகவும். இன்னும் சற்று நிதானமாய் மனதை மத்திய நிலையில் நிறுத்தி யூகிப்பீர்களானால் உங்கள் மனசாட்சியே உண்மையை விளக்கிவிடும்.

ஒரு வரனுடைய காமப்பசியை பூர்த்தி செய்யும் பெண்ணின் பெற்றோர்களுக்கு கன்னிகாதான பலன் கிடைக்கும் என்று உங்கள் சாஸ்திரத்தில் கூறுவதின் சாராம்சம் யாதெனில் ஒரு உத்தம வரனுடைய ஆசையை நிவர்த்திசெய்வதே பெற்றோர்கள் அடையும் பலன் என்று ஏற்படும். அப்பனாலேயே சொர்க்கலோகாதிகள் கிடைப்பதாயும் வைத்துக்கொள்ளலாம். என்றாலும் ஆசையை பூர்த்தி செய்வதே பலன் என்று ஏற்படும். அத்தகைய பலன் பெண்ணையுடைத்தவனாலேயே அடையமுடியும் என்பதுபோல, ஒரு வரனை உடைத்தாயிருக்கும் புருஷன் ஒருவனிடம் வயது வந்துள்ள ஒரு பெண் சென்று என்னுடைய காமப்பசியை நீக்கும்பொருட்டு உன் மைந்தனை எனக்கு தானம் செய்யவேண்டும் என்று கேட்கும் பெண்ணுக்கு வரதானம் செய்யும் புருஷனுக்கு மேல் சொல்லிய தானபலன் சொர்க்கலோகாதி பலன்களை தரமாட்டாதா? இதைக் கருதாது விடுத்து பெண்களை நமது சுகத்துக்காகவே கடவுள் சிருஷ்டிசெய்திருப்பதாக பாவித்து ஆடு மாடுகளைப்போல் அடிமை

இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

## திரு. சத்தியமூர்த்தியின் கூக்குரல்.

இது வரைக்கும் திரு. சத்திய மூர்த்தியை 'ஹார்ட்டல்' இயக்கமானது ஒதுக்கி மூலைக்குள் அழுத்தியிருந்தது. இப்பொழுது அவர் வெளிக்கிளம்பிவிட்டார். அவர் பொது ஜன இயக்கம் நடத்தி வெற்றி பெற்றுத் தலைவராக விளங்க விரும்பித், தோற்றுப்போய், அவமானப்பட்டு, இப்பொழுது அவர், மீண்டும் தம் பெரும் கீர்த்திஸ்தானத்தை யடைந்திடவேண்டுமென வெண்ணிப் புறப்பட்டிருப்பது யாருக்கும் வியப்பைத் தந்திடாது. அவர் பத்திரிகைக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில், சென்னை கவர்னர், டாக்டர் சுப்பராயன், ஏனை மந்திரிமார் இவர்கள் பெருங்குற்றங்கள் செய்தனரெனக்கூறி, அவர்களை மிகவும் பிரமாதமாய்க் கண்டிக்கிறார். ஒருவர் அச்செய்தியைப் படித்தாலே அது ஒருவரைத் திடுக்கெனத் தூக்கிப்போடக் கூடியதாக விருக்கிறது. அதை எப்பேர்ப்பட்ட பொல்லா வம்புக்கார ஆசாமிகள் படித்தாலும் பயந்து நடுங்கும்படி, அத்தகைய வார்த்தைகளில் அவர் எழுதியிருக்கிறார். வார்த்தைப் பிரயோகக்கடுமையானது மிகவும் ஏறிப்போய், அவர் டாக்டர் சுப்பராயனையும் ஒரு அற்பன் என்கிறார். இதைப்பார்க்குமொருவர், சென்னையிலுள்ள அரசியல் நிலைமையானது, இவ்வண்ணம் ஒருவரை யொருவர் பேசும்படி அவ்வளவு கேவல நிலைமைக்கு வந்துவிட்டதென்று எண்ணத்தக்கதாய் அப்படிப்பட்ட ஒரு கடுமையான நிலையிலா சென்னையின் அரசியல் விவகாரம் வந்திருக்கிறதென்று ஆச்சரியப்படுவர். ஆனால், அப்படிப்பட்ட பதப்பிரயோகம் செய்திடும்படி ஏற்பட்டு இருக்கின்றதென்று எவரும் பயப்படக்கூடாதபடி அதிர்ஷ்டவசமாக நிலைமையுள்ளது.

மிஸ்டர் சத்தியமூர்த்தி தாம்தட்டுக்கெட்டு அவ்விதம் எழுதிவிட்டதாகக் கூறலாம். ஆனால் தம் மனதில் ஒழுங்கான எண்ணமே ஏற்பட்டிருந்ததென்றும் அவர்கூற முற்பட்டாலும் அது ஏற்கப்படசகூடிய தன்மையில் அவர் தம்மை வைத்துக்கொண்டில்லை. மனதில் ஒழுங்காகவே யெண்ணிச் செயலில் சற்று தவறியவர்கட்கு, காரியத்தில் தம் குணத்தை நம்பிக்கைப்படும்படி காட்டவேண்டுமென ஊக்கம் பிறந்திடும். ஆனால் சத்தியமூர்த்தி இவ்விதமாய் எழுதுவதை எவரும் பொருட்படுத்த மாட்டார். ஆனால், நாம் என்ன திரு சத்தியமூர்த்தியைக் கேட்கவிரும்புகிறோமெனில், 'நீர் இவ்வண்ணம் ஏனையோர்களது செய்கைகளைப்பற்றிப் பழுதுரைக்கவும் தீர்ப்பு உரைக்கவும் உமக்கென்ன யோக்யதை வாய்த்திருக்கிறது?' என்பது. அவரது பொதுவாழ்வின் சரித்திரத்தை ஆராய்கையில் அவர் அரசியல் யோக்கியம் சிறிதும் இலாதவர் என்பதே புலப்படுகிறது. இவரைப்போல மதிக்குறைவான செயல்களைச் செய்தவர்கள் எந்த உள்ளூர் எனத்தேடப் புகுவோமாகில் 'டேம்மேனி ஹால்' வர்க்கமேயாகும். முன் பின் வாய்க்கப்பெற்றில்லாத அப்படிப்பட்ட ஒரு சரித்திரம் அவருக்கு உளது. அவரைப்போல எவருமே நடந்திடவும் மாட்டார். ஆகவே, அத்தகைய ஆசாமியான திரு. சத்தியமூர்த்தி ஏனையோர்களைப்பற்றித் தன் தீர்ப்பு வார்த்தையைக்கூற வருகையில், "வைத்தியரே நீரே உம்மை சொஸ்தப்படுத்திக்கொள்ளும்." எனச்சொல்லலாமெனத் தோற்றுகிறது.

"Federated India"

---

26—2—28 ல்

### தஞ்சை இளைஞர் மகாநாட்டில் கொடியேற்று விழாவின்போது பாடப்பட்ட கொடிப்பாட்டு.

வெற்றிக் கொடியினையே நாட்டுவோம்—நாட்டுவோம்
வெற்றிக்கொடியினையே நாட்டுவோம் (வெ)

எவரும் சமமென்றே காட்டுவோம்—நிறைந்து
எங்கும் உள இருளை ஓட்டுவோம் (வெ)

ஜாதியில் பேதமின்றென் றறைகுவோம்—சர்வ
சமயத்து வேஷமின்றி உறைகுவோம். (வெ)

நீதியில் பேதமதை நீக்குவோம்—மனுவின்
நியாயம் அலாதவற்றைத் தாக்குவோம் (வெ)

பொருளற்ற சடங்குகளைத் தள்ளுவோம்—நன்றாய்ப்
புதிதாகப் பொருளமையக் கொள்ளுவோம் (வெ)

தீண்டாமை இல்லையென்றே சொல்லுவோம்—வந்த
தீய வழக்கங்களை வெல்லுவோம். (வெ)

நாடு பெருமைபெற நாடுவோம்—என்றும்
நன்மை ஒற்றுமை யென்று கூடுவோம் (வே)

எல்லோரும் இன்புறவே எண்ணுவோம்—நாங்கள்
எதற்கும் அஞ்சாமல்வேலை பண்ணுவோம். (வெ)

நாவுக் கரசுதமிழ் கூறுவோம்—இந்த
நானிலந் தன்னிலென்றும் வீறுவோம். (வெ)

---

முக்கூடல் வாசிகளே

## கவனியுங்கள்.

அம்பா சமுத்திரம் தாலூகாவைச் சேர்ந்த முக்கூடல் கிராமம் தென்னாட்டில் ஒரு கலை வியாபார ஸ்தலம். இங்கே (நாங்கள் பெண்கள்) தைத்தொழிலில் நன்றாய் அபிவிருத்தியடைந்திருக்கின்றோம். எங்கள் தொழிலின் பயனாய் எங்களுக்குக் கிடைக்கும் கூலியிலிருந்து மகமையாகக் கொடுக்கும் தொகையைக் கொண்டு இவ்வூருள்ள எழாவது வகுப்புவரையுள்ள கல்விச் சாலையும் நடக்கின்றது. இதில் மாதம் ஒன்றுக்கு சுமார் 1000 ரூபாய் வசூலாகிறது. நாங்கள் இப்படி அரும்பாடு பட்டுக்கொடுக்கும் உதவிப்பணத்தால் தான் பள்ளிக்கூட கட்டடம் கட்டப்பட்டதும் இப்பொழுது பள்ளிக்கூடம் நடப்பதுவும்.

இன்னும் அநேக கனவான்கள் பள்ளிக்கூட உபயோகத்திற்காக தங்கள் தங்கள் நிலங்களைத் தத்தம் செய்தார்கள். ஆனால் அதில் ஒரு பணக்காரரான ஒருவர் மட்டும் தனக்குப்பாத்தியப்பட்ட கொஞ்ச நிலத்திற்கு கிரையம் வாங்கிக்கொண்டார். மகமையாக ஒரு தம்படி கொடுக்கவும் முன்வரவுமாட்டார். ஆனால் பள்ளிக்கூட நிர்வாக சபையின் தலைவர் அந்தப் பேர்வழிதான். பள்ளிக்கூட வரவு செலவுகள் கடவுளுக்குத்தான் வெளிச்சம்! காரியதரிசி என்பவரோ அதற்கு ஒரு படி மேல். பள்ளிக்கூட ஆரம்பகாலத்தில் உண்டான நிபந்தனைப்படி தேர்தெடுக்க கூடாதாம்! ஜில்லா கல்வி இலாக்கா சங்கத்தார் தீர்மானப்படி நடக்கவுமாட்டாராம்! அப்படி நடந்தால் உபாத்தியாயர்கள் அடிமைத்தொழில் செய்யமாட்டார்களாம்! பொறுப்புள்ள பதவியாளர்கள் இப்படியானால் அதற்கு உடந்தையாக விருக்கும் நிர்வாக சபை மெம்பர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமா.

இதுமட்டுமா, மாணவர்களின் தொகை 250 லிருந்து 100-க்கு குறைந்து விட்டது. உபாத்தியாயர்கள் தலைவரும் காரியதரிசியும் (மாமாவும் மருமகனும்) நிர்வாகசபை மெம்பர்களே இதை எல்லாம் கேட்கக்கூடாதா? அதை சரியாக நடத்த முடியாதபோனால் அல்லது அதை ஒழுங்காக நடத்தத் தெரியாது போனால் அந்த நிர்வாக சபையை எங்களிடம் கொடுங்கள்.

சகோதரிகளே! நாம் ஏன் அரும்பாடு பட்டு இந்த உபயோகமற்ற சுயநலப்புலிகளுக்கு பணம் கொடுக்கவேண்டும். நமக்கு சமத்துவம் கொடுக்கின்றார்களா? அல்லது நம் முன்னேற்றத்திற்காக உழைக்கின்றார்களா? ஒன்றுமில்லை. இந்த வியாசத்தைக் கண்டவுடன் அவர்கள் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தாது போனால் நாம நம் வேலைகளை ஆரம்பிப்போம். நம் பணத்தை வீணாகக் கொடுக்க வேண்டாம். கண் விழித்து முன்வாருங்கள்.

ராமலெக்ஷிமி.

## ஸ்ரீமான்
# ராஜகோபாலாச்சாரியின் சீர்திருத்த யோக்கியதை

### மனுதர்ம சாஸ்திரத்துக்கு வக்கீல்.

தமிழ்நாட்டில் தற்காலம் தோன்றியிருக்கும் சுயமரியாதைக் கிளர்ச்சியின் பலனாக, இந்துமத மென்பதைப் பற்றியும், அதற்கு ஆதாரமாயுள்ள வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் என்பனவற்றைப்பற்றியும், வருணம், தர்மம் என்பனவற்றைப்பற்றியும் மக்களுக்குள் பரபரப்புண்டாகி அவற்றைப் பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்தலும், அவற்றின் புரட்டுகளைத் வெளியாக்கி தைரியமாய் கண்டித்தலும், அவற்றால் ஏற்பட்ட கொடுமைகளை ஒழிக்க ஆங்காங்கு தீவிரப் பிரசாரம் செய்தலும், கொடுமைக்கு ஆதாரவளிக்கும் ஆதாரங்களைத் தீயிட்டுக் கொளுத்தலுமான பிரசாரங்கள் மும்முரமாய் நடப்பதைக் கண்டு பார்ப்பனர்கள் தங்கள் வாழ்வுக்கே ஆபத்து வந்ததெனக் கருதி இவைகளுக்கு விரோதமாக எதிர் பிரசாரம் செய்வதும், பார்ப்பனரல்லாதாரிலேயே சிலரை ஏவிவிட்டு இடையூறு செய்விப்பதும், வேறு மார்க்கத்தில் வாழ முடியாதவர்கள் இவ்வெதிர்ப் பிரசாரத்திற்கு ஆதரவளித்து வாழ்வதுமான காரியங்கள் நடைபெற்று வருவதும் யாவரும் அறிந்த விஷயமே யாகும். சிறிது காலமாய் 'சுதேசமித்திரனும்' 'தமிழ்நாடு' 'சுயராஜ்யா'வும், 'ஹிந்து'வும் மற்றும் சில பார்ப்பன கூலிப் பத்திரிகைகளும் இவ்வேலையில் ஈடுபட்டு தீவிரமாய் எதிர்ப் பிரசாரம் செய்துவருவதும் யாவரும் அறிந்த விஷயமாகும். இவ்வளவும் போதாமல் சீர்திருத்தக்காரர் என்றும், தேசாபிமானிகள் என்றும் பேர்வாங்கிய சிலபார்ப்பனர்களும் இதில் ஈடுபட்டு மக்களை ஏய்த்து வருகிறார்கள்.

சீர்திருத்தக்காரர் என்பவர்களில ஸ்ரீமான் கே. நடராஜன் என்னும் பார்ப்பனர் இந்தியா முழுதுக்கும் சீர்திருத்தக்காரர் என்னும் பேர்வாங்கியவர். அவருடைய சூழ்ச்சியைப் பற்றி பலதடவை எழுதியிருக்கிறோம். ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரி என்கின்ற ஒரு ஐயங்கார் பார்ப்பனர் தமிழ் நாடு முழுவதிலும் பெரிய சீர்திருத்தக்காரர் என்ற பெயர் வாங்கினவர். தமிழ் மக்களை யெல்லாம் அடியோடு ஏய்த்தவர். இப்பொழுதும் சமயம் பார்த்து வெளிக்கிளம்புவதற்கு பதுங்கிக் கொண்டிருப்பவர். பொது உலகத்தில் தன்னை ஒருவரும் மறந்து விடாமலிருக்கும்படி விஷமப் பிரசாரத்தின் பேரால் அடிக்கடி தலை காட்டிக் கொண்டிருப்பவர். தனக்கு ஜாதி வித்தியாசமில்லை என்பதாகச் சொல்லிக்கொண்டும், தன்னிடம் பார்ப்பனத் தன்மை இல்லை யென்று சொல்லிக்கொண்டும், பார்ப்பனீயத்தை விட்டு வெகுகாலமாயிற்று என்று சொல்லிக்கொண்டும், சில பார்ப்பனரல்லாத வாலிபர்களை ஏமாற்றிக்கொண்டும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஒழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதில் இந்தியாவிலுள்ள பார்ப்பனரெல்லாரையும்விட அதிகமான கவலையும் அளவிறந்த சூழ்ச்சியும் தந்திரமும் கொண்டவர். இப்படிப்பட்ட ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் 21-3-28ல் இங்கிலீஷ் 'ஸ்வராஜ்ய' பத்திரிகையில் மனுதர்ம சாஸ்திரத்துக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு 7 கலங்கள் எழுதியிருக்கிறார். அதில், மனுசாஸ்திரத்தை எரிக்க வேண்டுமென்பது தற்கொலைக்கு ஒப்பாகுமென்றும், அது அருமையான நீதிகளைக் கொண்டது என்றும் விசேஷமாய்ப் புகழ்ந்துவிட்டு, பார்ப்பனருக்கு சம்பந்தப்படாததும், கவலையில்லாததுமான விஷயங்களைப்பற்றி மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து இரண்டொரு வாக்கியங்களை எடுத்துக்காட்டி பொது ஜனங்களை ஏமாற்றப் பார்த்திருக்கிறார். இதன் காரணமென்னவென்போமானால், மனுதர்ம சாஸ்திரத்தைக் கொளுத்த வேண்டுமென்பதான உணர்ச்சி இந்தியாவெங்கும் பரவி வருவதைப் பார்த்து அதை அழிப்பதற்காகவே எழுதப்பட்டதாகும். மனுதர்ம சாஸ்திரத்தில் உள்ள சிலவாக்கியங்களை நாம் இதிலெடுத்து காட்டுகிறோம். அந்தந்த வாக்கியங்களின் முடிவில் அவ்வவ்வாக்கியங்கள் எத்தனையாவது அத்தியாயத்தில் உள்ளதென்பதையும், அது எத்தனையாவது சுலோக மென்பதையும், காட்டி அவ்வவ்வாக்கியங்களை கீழே குறிப்பிடுகின்றோம். அதாவது

'பிராமண குலத்தில் பிறந்தவன் ஆசாரமில்லாதவனுயினும், அவன் நீதி செலுத்தலாம்; சூத்திரன் ஒருபோதும் நீதி செலுத்தலாகாது.' அ. 8. சு. 20

'சூத்திரர்கள் நிறைந்த தேசம் எப்பொழுதும் வறுமையுடையதாயிருக்கும்' அ. 8. சு. 22.

'சூத்திரனும் மிலேச்சனும் பன்றியாகவும் பிறப்பது தமோகுணத்தின்கதி' அ. 8 சு. 22.

'ஸ்திரீகள் புணர்ச்சி விஷயத்திலும், பிராமணரைக் காப்பாற்றும் விஷயத்திலும் பொய் சொன்னால் குற்றமில்லை.' அ. 8. சு. 112

'நீதி ஸ்தலங்களில் பிரமாணம் செய்யவேண்டிய பிராமணனை சத்தியமாகச் சொல்லச் சொல்லவேண்டும். பிரமாணம் செய்யவேண்டிய சூத்திரனைப் பழுக்கக்காய்ச்சின மழுவை எடுக்கச்சொல்லவேண்டும். அல்லது தண்ணீரில் அமிழ்த்தவேண்டும். சூத்திரனுக்குக் கை வேகாமலும் தண்ணீரில் அழுந்தியதால் உயிர்போகாமலும் இருந்தால அவன் சொன்னது சத்தியம் என உணரவேண்டும்' அ. 8. சு. 113, 114, 115.

'சூத்திரன பிராமணரைத் திட்டினால் அவனது நாக்கை யறுக்கவேண்டும்' அ. 8. சு. 270.

'சூத்திரன் பிராமணர்களின் பெயர் ஜாதி இவற்றைச் சொல்லித்திட்டினால் 10 அங்குலம் நீளமுள்ள இரும்புத் தடியைக் காய்ச்சி எரியவிட்டு அவன் வாயில் வைக்கவேண்டும்' அ. 8. சு. 271.

'பிராமணனைப்பார்த்து 'நீ இதைச் செய்யவேண்டும்' என்று சொல்லுகிற சூத்திரன் வாயிலும் காதிலும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றவேண்டும்.' அ. 8. சு. 272.

'சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்தால் அவனது இடுப்பில் சூடு போட்டாவது அல்லது ஆசனப் பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டுத் துரத்தவேண்டும்' அ. 8. சு. 281.

'பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டு பிராமணரல்லாதாரைக் கொன்றவனுக்கு பாவமில்லை' அ. 8. சு. 143.

'சூத்திரன் பிராமணப்பெண்ணைப் புணர்ந்தால அவனது உயிர்போகும் வரையில் தண்டிக்கவேண்டும்.'

'பிராமணன் கொலைக்குற்றம் செய்தாலும் அவனைக்கொல்லாமல், செய்த குற்றத்திற்காக தண்டனைக்கும் அனாக்ஷாமலும் பொருளைக் கொடுத்து அனுப்பி விடவேண்டும்' அ. 8. சு. 380.

'அரசன் சூத்திரனை பிராமணர் முதலிய உயர்ந்த சாதிக்கு பணிவிடை செய்யும்படி கட்டளை இடவேண்டும். சூத்திரன் மறுத்தால் அவனைத் தண்டிக்கவேண்டும்' அ. 8. சு. 410

'பிராமணன் கூலி கொடாமலே சூத்திரனிடம் வேலை வாங்கலாம். ஏனென்றால் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே கடவுளால் படைக்கப்பட்டிருக்கிறான்' அ. 8 சு. 413.

'பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன்தேடிய பொருளைக் கைப்பற்றலாம். ஏனென்றால் அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொருளுக்கும் உடையவனாகமாட்டான்' அ. 8. சு. 417

'சூத்திரன் பொருள் சம்பாதித்தால் அது அவனுடைய எஜமானனாகிய பிராம்மணனுக்குச்சேரவேண்டுமேயன்றிச் சம்பாதித்தவனுக்குச் சேராது' அ. 9. சு. 416.

'பிராமணனால் சூத்திர ஸ்திரீக்குப் பிள்ளை பிறந்தால் அப்பிள்ளைக்குத் தந்தை சொத்தில் பங்கில்லை' அ. 8 சு. 155.

'பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனை சித்திரவதை செய்து கொல்லவேண்டும். ஆனால் சூத்திரனுடைய பொருளை பிராம்மணன் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்' அ. 9. சு. 248.

'பிராமணன் மூடனானாலும் அவனே மேலான தெய்வம்' அ. 9, சு. 317.


'பிராமணர்கள் இழிதொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள்' அ. 9, சு. 318.

'பிராமணனிடமிருந்து க்ஷத்திரியனுண்டானவனானதனால் அவன் பிராமணனுக்குத் துன்பஞ்செய்தால் அவனை சூன்யம் செய்து ஒழிக்கவேண்டும்' அ. 9, சு. 319, 320.

'சூத்திரனுக்கு பிராம்மணப் பணிவிடை ஒன்றே பயன் தருவதாகும். அவன் பிராமணனில்லாத விடத்தில் க்ஷத்திரியனுக்கும் க்ஷத்திரியனில்லா விட்டால் வைசியனுக்கும் தொண்டு செய்யவேண்டும். அதிகமான பசுக்களும் செல்வமும் வைத்திருக்கிறவன் பிராம்மணன் கேட்டுக்கொடுக்காவிட்டால் களவு செய்தாவது பலாத்காரம் செய்தாவது அவற்றைப் பிராமணன் எடுத்துக்கொள்ளலாம்' அ. 11, சு. 12.

'சூத்திரன் வீட்டிலிருந்து கேளாமலும் யோசிக்காமலும் தேவையான பொருளைப்

(இதன் தொடர்ச்சி



ஆனந்தமயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ஞு பங்குனி மீ 13 வ

தலைவர்

## உத்தமபாளையம் முதலியார் மறைந்தார்.

தமிழ் நாட்டுத் தலைவரும் தமிழர்களின் நண்பருமான உத்தமபாளையம் முதலியார் என்கின்ற மதுரை ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வியாழக்கிழமை இரவு காலஞ்சென்றார் என நண்பர் திரு. பி. டி. ராஜன் அவர்களின் தந்தியால் தெரிந்து திடுக்கிட்டுப்போனோம். தலைவர் முதலியார் அவர்களுக்கு ஏற்பட்ட நீரிழிவு வியாதியானது எவ்வளவு சிகிச்சை செய்தும் குணப்படாமல் அவரது உயிருக்கு "கூற்றுவ"னாகவே முடிந்து விட்டது. திருவாளர் முதலியார் அவர்கள் தமிழ் நாட்டின் பழங்குடி மக்களுள் முதன்மையானவர். தென்னாட்டில் நாயக்கர் அரசாங்கம் ஏற்பட்டிருந்த காலத்தில் அவருக்கு பிரதம மந்திரிகளில் ஒருவராகிய திரு. அரியநாயக முதலியாரின் சந்ததியில் வந்தவர். மதுரை ஜில்லாவிலுள்ள பெரிய மிராசுதார்களில் முக்கியமானவர். பாரம்பரியமாகவே செல்வமும் செல்வாக்கும் பெற்ற குடும்பத்தவர். அரசாங்கத்தாராலும் சுதேச மன்னர்களாலும் புராதன ஜமீன்களாலும் விருதியும் போற்றப்பட்டவர். நமது மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் முடிசூட்டு வைபவத்திற்கு அழைக்கப்பட்டு இங்கிலாந்து சென்றவர். இவையாவும் அவரது மேன்மையையும் அந்தஸ்தையும் காட்டக்கூடியதாயினும் நாம் அவரைப் போற்றித் துதிக்கும் தன்மை என்னவென்றால், தமிழ் நாட்டில் உள்ள மற்ற செல்வவான்களைப்போல் தமது வாழ்விற்கும் திருப்திக்கும் தமது செல்வத்தை உபயோகிப்பதும் தமது சுயநலத்திற்காக செல்வம் சம்பாதிக்க வாழ்வு நடத்துவதும் போன்ற செல்வவான்களைப்போலல்லாமல் இவர் தமிழ்மக்களின் மேன்மைக்கும் சுயமரியாதைக்குமாக பெரிதும் தமது வாழ்வையும் செல்வத்தையும் உபயோகப்படுத்திவந்தவர். பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரம்பித்த காலம் முதற்கொண்டு அவ்வியக்கத்திற்கு ஸ்தம்பமாய் இருந்து வந்தவர். அன்றியும் சர்தங்காரனாம் கொண்டும அவ்வியக்க சம்பந்தமாய் மற்றவர்களைப்போல் அடிக்கடி அபிப்பிராயமாறுதல் அடையாமல் ஒரே நிலையில் இருந்து அவ்வியக்கத்திற்கு தொண்டு செய்து வந்தவர். தென் இந்திய நலஉரிமைச்சங்கத்திற்கு உபதலைவர். சென்ற சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் சிலர் தோல்வி அடைந்த காரணத்தால் இயக்கமே மறைந்து விட்டது என்று நினைக்கும்படியாக ஏற்பட்டநெருக்கடியான காலத்தில் மதுரையில் பெரிய மகாநாடு கூட்டுவித்து இயக்கத்திற்கே புத்துயிரளித்த பெரியார். நமது மக்களுக்காக இன்னும் எவ்வளவோ அரிய பெரியகாரியங்கள் செய்யவேண்டும் என்றும் இவ்வியக்கத்தினிடம் பிணங்கி பிரிந்துநிற்கும் மக்களையும் ஒன்று சேர்க்கவேண்டும் என்றும் பெரிதும் கவலையுடன் பல பெருந்திட்டங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தவர். சுருங்கக்கூறின் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு சென்னைதவிர வெளியிடங்களில் யாராவது உண்மையான தலைவர்கள் இருப்பார்களானால் அவர்களுள்நமது முதலியாரே முதன்மையானவர். இப்பேர்ப்பட்ட ஓர் பெரியார் இந்நிலையில் நம்மை விட்டுப் பிரிந்தகாலமானது நமது கெட்டகாலம் என்றே சொல்லவேண்டும்.

அவர்களது அருமைக்குமாரருக்கும் அவரது சகோதரருக்கும் மற்றொருசகோதரின் குமாரரான திரு. பி. டி. ராஜன் அவர்களுக்கும் மற்றும் அக்குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எல்லாம் வல்லசக்தியானது அவர்கட்கு ஆறுதல் அளிப்பதாக.

## 'REVOLT'
## 'ரிவோல்ட்'

ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியும் கே. நடராஜன் போன்றவர்களும் மற்றுஞ் சில சுயநலக்காரர்களும், கூலிகளும் நமது பிரசாரத்திற்கு விரோதமாக ஆங்கிலத்தில் பத்திரிகைகள் மூலியமாயும் வியாசங்கள் மூலியமாயும் பிரசாரம் செய்கிறபடியாலும், நமது பிரசாரமும் பத்திரிகையும் தமிழிலேயேயிருப்பதாலும் அது தமிழ்நாட்டைவிட்டு வெளியில் போக மார்க்கமில்லாமல் இருப்பதாலும் ஆங்கிலத்தில் ஒரு வாரப்பத்திரிகை 'குடி அரசு' கொள்கையை ஆதாரமாகக்கொண்டு ஆரம்பிக்க வேண்டுமெனபதாக ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அப்பத்திரிகைக்கு, 'ரிவோல்ட்'(Revolt)என பேர்கொடுப்பதென்றும் தீர்மானித்திருக்கிறோம். அப்பத்திரிகைக்கு கௌரவ ஆசிரியர்களாக இருக்க சில ஆங்கிலமகற்ற நண்பர்கள் வாக்களித்திருக்கிறார்கள். பல அறிஞர்கள் அரிய விஷயதானம் செய்யவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்பத்திரிகையை தற்கால 'குடி அரசு' அளவில் 8 பக்கம் கொண்டதாகவும் வருஷசந்தா ரூபாய் 3 ஆகவும் வைத்து வெளிப்படுத்தத் தீர்மானித்திருக்கிறோம். சமீபத்தில் வெளியிட முயற்சித்துக்கொண்டிருக்கிறோமாகையால், அன்பர்கள் சந்தாதாரர்களாய்ச் சேரவும் மற்றும் கூடிய உதவிகள் செய்யவும் முன்வர வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம். சந்தாதாரர்களாகச் சேர இஷ்டமுள்ளவர்கள் பதிவுசெய்துகொள்ளவேண்டுமாய் விரும்புகிறோம்.

உஷார்! —— உஷார்!

## மண்டையிலடியுங்கள்.

சென்னையில் பார்ப்பனியத்தைப் பரப்புவதற்கு ஒரு புதிய ஸ்தாபனம் சமீபத்தில் பார்ப்பனர்களால் உண்டாக்கப் பட்டிருக்கிறது. அதுதான "கிராமப் புனருத்தாரண வேலை ஸ்தாபனம்" நண்பர்களே இந்த பெயரைக்கண்டு ஏமாந்து விடாதீர்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு ஸ்ரீமான்கள் நேரு, சீனிவாசய்யங்கார், சீனிவாச சாஸ்திரியார் போன்றவர்கள் ஒன்று சேர்ந்து 'இந்தியஐக்கிய ஒற்றுமை சங்கம்' என்பதாக ஒன்றை ஸ்தாபித்தார்கள். அதில் வகுப்பு உணர்ச்சி உள்ளவர்களை சேர்ப்பதில்லை என்றும் நிபந்தனை போட்டார்கள். அது நமது தமிழ் நாட்டிற்குள் வாராதபடி மண்டையிலடித்து கொல்லப்பட்டுப்போய் விட்டது.

அது போலவே. இப்போது மறுபடியும் முயற்சி எடுத்து கிராம புனருத்தாரணம் என்னும் பெயரில் சென்னையில் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு மெம்பர்கள் ஸ்ரீமான்கள சர் சி. பி. ராமசாமி அய்யர், மோதிலால் நேரு, ஏ. ரங்கசாமி அய்யர், கேல்கர், பட்டாபி சீதாராமய்யர், பி. சிவாராவ், டாக்டர் பெசண்டு, அருண்டேல், ரங்கநாத முதலியார் போன்றவர்களே. இது பிரமஞான சங்கத்தினர் வாலைப்பிடித்து ஆரம்பித்த புதிய சூழ்ச்சியேயாகும்.

தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு கொடிய எதிரியாக பிரமஞான சங்கம் விளங்குகின்றது. அச்சங்கத் தலைவர் ஸ்ரீமதி பெசண்டம்மைக்கு உள்ள பணமும் செல்வாக்கும் அடைய பிரமஞான சங்கத் தோற்றமும் அநேக பார்ப்பனரல்லாதார்களையும் மூடர்களாகவும் இனத் துரோகிகளாகவும் ஆக்கி அச்சங்கத்திற்கு பலிகொடுத்திருக்கிறது. இதைப் பார்த்து யாரும் ஏமாந்து விடக்கூடாது என்றும், இப்புதிய சூழ்ச்சியில் யாரும் சிக்கி அதற்கு ஆளாகக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்து பணிவாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

## இந்தியா மந்திரிக்கு தந்தி.

சென்ற 17—3—28ல் ஸ்ரீ S. ராமநாதன் M. A. B. L. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் இவ்வூரில் பார்ப்பனரல்லாதார் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அதில் சென்னை அரசாங்க சட்டமெம்பர் பதவியை பார்ப்பனரே 18 வருட காலமாய் வகித்துவந்திருப்பதால் அப்பதவியை பார்ப்பனரல்லாதார் ஒருவருக்கு அளிக்க வேண்டுமென்று இந்தியா மந்திரிக்கு தந்தி அனுப்ப வேண்டுமெனபதாக ஒரு தீர்மானம் செய்து தந்தியும் அனுப்பப் பட்டிருக்கிறது.

# இன்னுமா சந்தேகம்? இரகசியம் வெளியாய் விட்டது.

பார்ப்பனர்கள் காங்கிரஸின் பேராலும் தேசியத்தின் பேராலும் ஸ்ரீ வரதராஜுலு போன்ற ஆசாமிகளை சுவாதீனம் செய்து கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு கெடுதி செய்து வருவதைப் பற்றியும் சென்ற சட்டசபை தேர்தல் முடிந்தவுடன் 'காங்கிரசுக்கும் தேசபக்திற்கும்' விரோதமாய் பொய்க்கால் மந்திரிகளை சிருஷ்டித்ததும் அவர்களை ஆதரித்ததும் பார்ப்பனரல்லாதாருக்கு கெடுதி உண்டாகச்செய்யவே என்பதாகவும் பல முறை எழுதிவந்திருக்கின்றோம். இதற்கு சரியான ருஜு கொடுக்க சமீபத்தில் சென்னை சட்ட சபையில் விலக்கப்பட்ட மந்திரியாகிய ஸ்ரீமான் ரங்கநாத முதலியார் சொன்ன வாசகமே போதுமானதென்று நினைக்கின்றோம்.

அவர் சொன்னதாவது "1926-ல் நாங்கள் மந்திரி மந்திரிபதவிகளை ஏற்றுக்கொண்டவுடன் சில நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தால் எங்களை ஆதரிப்பதாக காங்கிரஸ் கட்சியாரிடமிருந்து ஒப்பந்தம் வெளியாயிற்று. அந்த ஒப்பந்த நிபந்தனை என்னவென்றால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் கமிட்டிகளுக்கும் மற்ற நியமனங்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியாரை நியமிக்காமலிருக்கவேண்டும் என்பதுதான்" இந்த வாசகம் ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார் அவர்கள் சொன்னதாக 23-3-28ல 'சுதேசமித்திர'னிலேயே இருக்கிறது. இதை காங்கிரஸ் கக்ஷி சட்டசபைத்தலைவர்கள் ஸ்ரீமான்கள் சாமி வெங்கிடாசலமும், சத்திய மூர்த்தியும் சட்டசபையில் மறுக்கவில்லை என்பதினாலேயே இது உண்மை என்பதில்ஒருசிறிதும்சந்தேகமில்லை. இப்படி இருக்க ஜனாப் அமீத்கான் சாயபு காங்கிரஸ் கட்சியாருக்கு அம்மாதிரி நிபந்தனை செய்துகொள்ள யாரும அதிகாரம் கொடுக்கவில்லை என்பதினாலேயே ஸ்ரீ ரங்கநாத முதலியார் சொல்வது பொய்யாய் விடுகிறதா? என்பதை வாசகர்களே யோசித்துப்பார்த்து தேசியமென்பதும காங்கிரசென்பதும் பார்ப்பனரல்லாதாருக்கு ஆபத்தா இல்லையா என்பதை முடிவுசெய்யவேண்டுகிறேன்.

# பெரிய அக்கிரமம்.

பம்பாயில் ஆயிரம் பேர்கள் பார்ப்பன மதத்தில் சேர்க்கப்பட்டதாக கேட்க மிகவும் வருந்துகிறோம். இது ஒரு பெரிய அக்கிரமமாகும். இந்த அக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பம்பாய் பார்ப்பனரல்லாதாருக்கு அறிவிருந்ததா இல்லையா என்று சந்தேகிக்கின்றோம். அதாவது,

ஆயிரம் தீண்டாதார்கள் என்பவர்களுக்கு பூணூல் போட்டு உபநயனம் செய்யப்பட்டதாம். இதற்காக பார்ப்பனர்களுக்கு செய்யும் சடங்குகள் எல்லாம் செய்யப்பட்டனவாம். இந்தத்தீண்டாதார்கள் எனப்படும் ஆயிரம் பேரும் நாளைக்கு நமக்கு எமனாய் வரப்போகிறார்கள் என்பது சத்தியம்.

ஏனெனில் இது போல் ஒவ்வொரு காலத்தில் சீர்திருத்தம் என்னும் பெயரால் நம்மவர்களுக்கு போட்ட பூணூலினாலும் செய்த உபநயனத்தாலுமே இந்நாட்டில் இத்தனை பார்ப்பன எமன்கள் தோன்றியிருக்கின்றன என்பது ஆராய்ச்சி உள்ள எவருக்கும் தெரியும். எனவே இந்த பூணூல் போட்ட ஆயிரம் பேரும் நாமம் போட்டார்களானால் ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாசய்யங்கார், வி. வி. சீனிவாசய்யங்கார் களாகவும், விபூதிபூசினார்களானால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, சிவசாமி ஐயர், சீனிவாச சாஸ்திரிகள், கே. நடராஜன் போன்றவர்களாகவும், கோபி சந்தனம் போட்டார்களானால் ஸ்ரீமான்கள் மதன் மோகன மாளவியாவாகவும் தோன்றப்போகிறார்கள் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகமே இல்லை.

இவைகளுக்கு சற்று தாமதமானாலும் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாராகவாவது வெகு சீக்கிரத்தில் வரப்போகிறார்கள் என்பது உறுதி. பூணூலை அறுத்தெறிய வேண்டிய சமயத்தில் ஆயிரக்கணக்கான பேருக்கு பூணூல் உபநயனம் நடப்பது அக்கிரமம்! அக்கிரமம்!! பெரிய அக்கிரமம்!!!

எனவே தீண்டாதார்கள் என்கின்ற நமது சகோதரர்களை பார்ப்பன மதத்திற்கு விட்டு பார்ப்பனர்களுக்கு பலிகொடுக்காமல் அவர்களுக்கு சகல உரிமைகளும் கொடுக்கவேண்டியது பார்ப்பனரல்லாதாரின் முக்கிய கடமையாகும்.

# ஸ்ரீ வரதராஜுலு.

ஸ்ரீ வரதராஜுலுவைப் பற்றியும் அவரது 'தமிழ் நாடு' பத்திரிகையைப் பற்றியும் சென்ற வாரம் அதில் 'தேசிகதாசன்' என்ற பெயரால் வெளியான கட்டுரையைப்பற்றியும் கண்டன வியாசங்கள் சரமாரியாக நமக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அவைகளைப் பார்க்கும்போது பொதுமக்களின் உணர்ச்சி இன்னவிதம் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் அவைகளை 'குடி அரசில்' பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ஏனெனில் அவற்றைப்பற்றி நாம் எழுதுவதற்கே 'குடி அரசில்' போதுமான இடம் கிடைக்காமல் அவஸ்தைப்படுகின்றோம். தேசிகதாசன் என்கின்ற மாறுபெயர்புனைந்தவரின் வியாசத்தைமாத்திரம் பிரசுரிக்க ஒப்புக்கொண்டுவிட்டோம். மற்ற வியாசங்கள் பிரசுரிக்கப்படாமைக்கு நிருபர்கள் மன்னிக்க வேண்டுகின்றோம். சீக்கிரத்தில் 'குடி அரசை' 24 பக்கமாக்கவேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருவதால் அது சமயம் அந்நிருபர்களை திருப்திசெய்ய முயற்சிக்கின்றோம்.

# யார் வார்த்தைகள் கடினம்?

பார்ப்பனர்களுக்கு அனுகூலமில்லாத மந்திரிகளை கண்டிப்பதற்கு என்று பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் கோகலே ஹாலில் ஸ்ரீ பெசண்டம்மையின் தலைமையில் ஒருகூட்டம்கூடியபோது ஒருவர் பேசுகையில் 'மந்திரிகள் தங்கள் பெண்ஜாதிகளை விட்டுக்கொடுத்து மந்திரி வேலைகளைசம்பாதிப்பார்கள்' என்று சொன்னாராம். இது யோக்கியமான வார்த்தையா என்று கேட்கின்றோம். இவ்வார்த்தைகளை எந்த யோக்கியர்களாவது கண்டித்தார்களா என்று கேட்கின்றோம். ஸ்ரீ வரதராஜுலுவாவது அவரது பத்திரிகையாவது தமது தலைவர்களுடைய இம்மாதிரி வார்த்தைகளைகண்டித்தாரா என்று கேட்கின்றோம்,

ஸ்ரீமான் குழந்தை கடற்கரையில் மந்திரிகளை கொடும்பாவி கொளுத்தியதற்கு கோபித்துக் கொண்டதாக வேஷம் போட்ட ஸ்ரீ வரதராஜுலுவுக்கும் "தமிழ்நாடு"க்கும் "பெண்ஜாதிகளை விட்டுக் கொடுப்பார்கள்' என்று சொன்ன வார்த்தை அவ்வளவு கடினமானதாக தோன்றவில்லைபோல் இருக்கிறது. இதனால் அக்கோஷ்டியின் அற்பத்தனமும் காலித்தனமும் எவ்வளவு என்பது விளங்கவில்லையா?

சாதாரணமாக ஹைகோர்ட் ஜட்ஜிகளில்யாருக்காவது மேகவியாதி இருக்குமானால் அது மைலாப்பூர் காங்கிரஸ் வாதிகள் தேசியவாதிகளின் உபயமேயாகும். இம்மாதிரி யோக்கியர்கள் மிகுதியும் நிறைந்த சென்னை காங்கிரஸ் வாதிகள் தங்கள் யோக்கியதைகளை மறைத்துக்கொண்டு இம்மாதிரி பேச அயோக்கியர்களை தூண்டிவிடுவதும், அதை கண்டிக்காமல் இருக்கச் செய்வதும ஒரு ஆச்சரியமல்ல. தவிர, வேறு ஒரு காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களும் அவரது ஆயுளில் இம்மாதிரியாக அநேக தடவைகளில் அதிகப்பிரசங்கித்தனமாய் பேசி விட்டு மன்னிப்பு கேட்டுக்கொண்டதானது ஸ்ரீ வரதராஜுலு மன்னிப்பு கேட்டுக்கொண்டதைவிட நூறுபங்கு அதிகமாகவே இருக்கும். ஆகவே யாருடைய வார்த்தைகள் கடினமானதென்பதும முழுவதும் அக்கிரமானதும் பொய்யானதும் என்பதும இழிவானது என்பதும இதிலிருந்தாவது பொது ஜனங்கள் உணரவேண்டுமாய் எதிர்பார்க்கின்றோம.

அன்றியும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமான, உத்தியோகங்கள் என்ன வேலை செய்து யார் பெற்றாலும பத்திரிகைகள் என்ன வேலை செய்து யார் நடத்தினாலும் அவைகள் எல்லாம் யோக்கியமானதேசியமென்பதும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமில்லையானால் அவைகளைப்பற்றி என்னவேண்டுமானாலும பேசலாம் என்பதுமே தேசியமாகவும் காங்கிரஸ் சட்டமாகவும் இருக்கின்றது என்பதையும் உணர வேண்டுமாய் விரும்புகின்றோம்.

குறிப்பு:—இவ்வாரம் தபாலாபீஸில் போதிய தபால் பில்லைகள் இல்லாததால் பத்திரிகை தாமதப்பட்டு அனுப்ப நேரிட்டதைப்பற்றி வருந்துகிறோம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

பிராமணன் பலாத்காரத்தினால் கொள்ளையிடலாம்' அ 11 சு 18.

'யோக்கியமான அரசன் இவ்விதம் திருடிய பிராமணனைத் தண்டிக்கக்கூடாது' அ 11 சு 20

'பெண்களையும் சூத்திரரையும் கொல்லுவது மிகவும் குறைந்த பாவமாகும்' அ 11, சு 66.

'ஒரு பிராமணன் தவளையைக் கொன்றால் செய்யவேண்டிய பிராயச்சித்தம் எதோ அதைத்தான் சூத்திரனைக் கொன்றால் செய்யவேண்டும்' அ 11 சு 131.

'அதுவும் முடியாவிடில் வருணமந்திரத்தை 3 நாள் ஜெபித்தால் போதுமானது' அ 11 சு 132.

'க்ஷத்திரியன் இந் நூலில் சொல்லப்பட்டபடி ராஜ்ய பாரம் செய்வதே தவமாகும் சூத்திரன் பிராமணப்பணிவிடை செய்வதே தவமாகும்' அ 11 சு 285.

'சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் சூத்திரனே யாவான். பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் பிராமணனேயாவான். ஏனெனில் கடவுள் அப்படியே நிச்சயம் செய்து விட்டார்' அ 10 சு 75.

'பிராமணரல்லாதவன் உயர்குலத்தோனுடைய தொழிலைச்செய்தால் அரசன் அவனது பொருள் முழுவதையும் பிடுங்கிக்கொண்டு அவனை நாட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டும்' அ 10 சு 96.

'சூத்திரன் இம்மைக்கும் மோக்ஷத்திற்கும் பிராமணனையே தொழவேண்டும்' அ 10 சு 122.

'பிராமணன் உண்டு மிகுந்த எச்சில் ஆகாரமும் உடுத்திக்கிழிந்த ஆடையும் கெட்டுப்போன தானியங்களும் சூத்திரனுடைய ஜீவனத்துக்குக் கொடுக்கவேண்டும்' அ 10 சு 125

'சூத்திரன் எவ்வளவு திறமையுடையவனாயிருந்தாலும் கண்டிப்பாய் பொருள் சேர்க்கக்கூடாது. சூத்திரனைப் பொருள் சேர்க்கவிட்டால் அது பிராமணருக்குத் துன்பமாய் முடியும். அ 10, 129

'மனுவால் எந்த வருணத்தாருக்கு இந்த மனுதர்ம சாஸ்திரத்தில் என்ன தர்மம் விதிக்கப்பட்டதோ அதுவே வேத சம்மதமாகும். ஏனென்றால் அவர் வேதங்களின் கருத்துக்களைநன்றாய்உணர்ந்தவர்' அ 2 சு 7.

'வேதத்தைச் சுருதியென்றும் மனுதர்ம சாஸ்திரத்தை ஸ்மிருதி யென்றும் அறியத்தக்கது. இது இரண்டையும் தர்க்கயுக்தியைக்கொண்டு மறுப்பவன் நாஸ்திகனாவான். அத்தகைய நாஸ்திகனை ஒழித்துவிடவேண்டும்' அ. 2 சு. 10.

இம்மாதிரி ஆயிரக்கணக்கான சுலோகங்கள் மனுதர்ம சாஸ்திரத்தில் காணப்படுவதைப்பற்றி ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரி என்ன சமாதானம் சொல்லுகிறார் என்று கேட்கிறோம். இதுபோலவே நாமும் நம்மையே ஒரு மனுவென்பதாகப் பெயர் சூட்டிக்கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கனுகூலமாய் ஒரு 'தர்மநூல்' இதுபோல் எழுதினால் ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியும் டாக்டர் நாயுடு-ஞம் மற்றும் இந்துமதப்பிரசாரம் செய்யும் வரதராஜலு போன்றாரும் சம்மதித்திருப்பார்களாவென்று கேட்கிறோம்.

இந்து மதம் என்பதற்கு மனுதர்ம சாஸ்திரமென்பதும் அதற்காதாரமென்று சொல்லப்பட்ட வேதமென்பதும் இவைகளை ஆதாரமாய்க்கொண்டு எழுதிவைத்த புராணங்களென்பதும் அப் புராணங்களில் காணப்பட்டகடவுள்களென்பவைகளுந்தவிர வேறு ஏதாவது ஆதாரமிருக்கின்றதா? யாராவது சொல்லமுடியுமா? அன்றியும் யோக்கியர்கள் இம்மூவாதாரங்களை மறுக்கமுடியுமா? இவற்றையோசித்தால் நாம் செய்துவரும் பிரசாரம் யோக்கியமானதா, அல்லது ஸ்ரீமான்கள் நடராஜனும் ராஜகோபாலாச்சாரியும் செய்துவரும் சிரத்தாநந்தப் பிரசாரமும் வரதராஜுலுவும் அவர்போன்ற சில கூலிகளும் செய்துவரும் இந்துமதப்பிரசாரமும் யோக்கியமானதா என்று முடிவுசெய்யும்படி பொதுஜனங்களை கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீமான்கள்

# சேதுரத்தினமையரும், சத்தியமூர்த்தி அய்யரும்

கடந்த மார்ச்சு மாதம் 17 தேதி பிற்பகல் நடந்த சென்னை சட்டசபைக் கூட்டத்திலே ஸ்ரீ சத்தியமூர்த்தி "மந்திரிகளுக்குத் தம் காரியம் ஆகவேண்டுமானால் அதிகாரிகளுக்குப் பல நன்மைகளைச்செய்வதாக உறுதி கூறலாம். பிறகு கவனிக்காமலிருக்கலாம். இத்தகைய வார்த்தைகளை யெல்லாம் கண்டு தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஏமாந்து விட்டார்களென வியப்படைகிறேன்" என்று கூறினார். புதிதாக மந்திரியான ஸ்ரீ சேதுரத்னமையர், "நாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம்" என்று கூறினார். அதற்குத் திரு சத்தியமூர்த்தி "நீங்கள் அப்படியானால் முட்டாள்களாக இருக்கவேண்டும்." என்று கூறினார். இதைக்கேட்டதும் டாக்டர் சுப்பராயன், "ஒரு மெம்பர் மற்றொரு மெம்பரை சட்டசபையில் முட்டாள் என்று கூறுவது முறையாகுமா?" என்று கேட்டார். உடனே தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியை நோக்கி "நீங்கள் அவ்வாறு சொன்னீர்களா?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி "தவறுதலாகச் சொல்லிவிட்டேன். அதை வாப்பீஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றார். சட்டசபை முழுவதும் பெருத்த சிரிப்பாயிருந்தது. சர் ஜேம்ஸ் சிம்சன் அவர்கள், சத்தியமூர்த்தியை நோக்கி "மன்னிப்புக்கேட்கவேண்டும்" என்று கூறினார். அதற்கு திரு சத்தியமூர்த்தி "நீங்கள் தலைவரல்ல" என்றார். சபைத்தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் மன்னிப்பு கேட்கும்படி கூறவுமில்லை, ஸ்ரீ சத்தியமூர்த்தி கேட்கவுமில்லை. மேலேகண்ட செய்தியைக் காண பொது ஜனங்கள் வருந்தாதிருக்க முடியுமென்று நினைக்க முடியவில்லை. இதனால் திரு சத்தியமூர்த்தி ஆழம் தெரியாமல் காலை விட்டுக்கொள்பவரென்றும், விஷயந் தெரியாமல் பேசிவிட்டு வாப்பீஸ் வாங்கிக்கொள்வதில் தலை சிறந்தவரென்றும் பல முறை கூறிவந்தது மிகப் பொருத்தமாகவே இருக்கின்றது.

ஒரு அய்யர் மீது மற்றொரு அய்யருக்கு இவ்வளவு கோபம் வரவேண்டிய காரணங்களை இனிமேல் தான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. பார்ப்பனர்களாலேயே கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் சிஷ்யரான ஒரு காங்கிரஸ் மந்திரிகளைப் பொறுப்பாகக்கண்டிக்கப் பேசுகையில், "பெண்டாட்டியை விற்றுக்கூட மந்திரி வேலை சம்பாதிப்பார்கள்" என்று அனிபெசண்ட் அம்மையாரின் தலைமையில் கூறினாராம். இத்தகைய பொறுப்பற்ற பேச்சுகளையும், மரியாதையற்ற வார்த்தைகளையும் பேசுகிற 'அறிவாளிகளான தேசிய வாதி'களிடம் ஏன் இன்னும் சுயராஜ்யத்தைக் கவர்ன்மெண்டார் கொடுக்கவில்லை? யென்பதுதான் பொது ஜனங்களுக்குக் கவலையாக இருக்கிறது. மந்திரி பதவிகளைப் பற்றிய இத்தகைய பேச்சுகளை "தேசிய வாதிகளாகிய அறிவாளிகள்" உபயோகிப்பார்களானால், சுயராஜ்யம் கிடைத்தபிறகு அப்பதவிகளைப் பெறுவது பற்றி நம் நாட்டில் என்னென்ன புதுமைகள் நடனம் புரியுமோ? என்பதைப்பற்றி வாசகர்களை உணரும்படி இந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகிறோம்,

கி. ஆ. பெ. விசுவநாதம் பிள்ளை.

## மகா நாடுகள்.

### திருச்சி.

திருச்சியில் அடுத்த மாதத்தில் திருச்சி ஜில்லா தென் இந்திய நல உரிமைச் சங்க மகாநாடும் சுயமரியாதை மகாநாடும் நடத்தப் போவதாக அச்சில்லா பிரமுகர்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். அத்தோடு லால்குடியிலும் ஒரு மகாநாடு நடத்தப்போவதாகவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். எனவே இம்மகாநாட்டிற்கு அச்சில்லாவாசிகளும் பிற ஜில்லா வாசிகளும் தங்கள் தங்களால் கூடுமான உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

### தஞ்சை.

தஞ்சை ஜில்லா திருவாரூரில் தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு நடத்த திருவாரூர் வாசிகள் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது போற்றத்தக்கதே. ஆனாலும் அச்சில்லா வாசிகளும் பிரபல மிராசுதாரர்களும் அம்முயற்சிக்கு வேண்டிய உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

### கோவை.

ஈரோட்டில் கோயமுத்தூர் ஜில்லா சுயமரியாதை மகாநாடு நடத்தச் சில பிரமுகர்களும் உற்சாகமும் மிகுந்த வாலிபர்களும் முயற்சித்து வருவது கண்டு நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆகவே மேல்கண்ட மகாநாடுகள் கூட்டும் முயற்சிகள் எல்லாம் ஆரம்ப சூரத்தனமாய் முடிந்து விடாமல் முயற்சியாளர்கள் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் ஒற்றுமையுடனும் இருந்து காரியங்களை வெற்றிபெற நடத்தி முடிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

## தேவஸ்தானமா? நாடகசாலையா?

செஞ்சி தாலூகா ஆனங்கூரில் டிராமா

மார்ச்சு மீ 13 தேதி இரவு மீனாக்ஷி சொக்கேசருடைய ஆலயத்தில் சில புருஷ ஆக்டர்களாலும் ஸ்திரீ ஆக்டர்களாலும் ஒரு நாடகம் நடைபெற்றது. வீரணாமூரிலிருந்து சில நண்பர்களும், சித்தாமூரிலிருந்து சில நண்பர்களும் சென்றிருந்தார்கள். நோட்டீசில் கண்டபடி அனைவரும் தரை டிக்கட் பெற்றிருந்தனர். டிக்கட் பெற்று உள்ளேபோய் பார்க்கையில் 2, 3 பிராமணர்கள் மாத்திரம் கட்டில் கொண்டுவந்து (ஸ்டேஜ்) மேடையின் எதிரில் போட்டு உட்கார்ந்திருந்தனர். அதனால் உட்சென்றவர்கள் ஸ்டேஜ் மேனேஜரை அழைத்து 'சமஉரிமையுள்ள தரை டிக்கட் மாத்திரம் நோட்டீசில் கண்டிருக்கிறதேயல்லாமல் கட்டிலுக்கு டிக்கட் உண்டு என்று காணப்படவில்லையே' என்று கேட்டார்கள். அதற்கு ஸ்டேஜ் மானேஜர் ஒன்றும் பதில் சொல்ல இயலாதவராய் அமைதி செய்து கொண்டிருந்தார்.

தர்மகர்த்தா தோப்பமுதலி அட்டூழியம்.

அதற்குள் சொக்கேசர் கோவில்தர்மகர்த்தா திரு. தொப்பய முதலியார் நடு சபையில் வந்து "ஆஹா எங்கள் குருக்கள் கட்டிலில் உட்கார்ந்திருந்தால் அதைப்பற்றி நீங்கள் கலகம் செய்கின்றீர்களா? இது ஆனங்கூர் என்று கவனியுங்கள். அப்பேர்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட் கலெக்டரையெல்லாம் பார்த்திருக்கிறோம்" என்று பெரிய இரைச்சல் போட்டார். இரைச்சல் அதிகரிக்கவே மேல் சொன்ன நண்பர் சுமார் 40 பேரும் தங்கள் டிக்கட்டுகளைவாபீஸ்பெற்றுக்கொண்டுபணத்தைவாபீஸ்கொடுக்கும்படிதெரிவித்தனர்.

முதலியாரின் கோஷ்டி.

முதலியார் கோஷ்டியை சேர்ந்தவர்களும் இன்னும் சமீப கிராமத்திலுள்ள அடிமைத்தொழில் செய்யும் சிலரும் 'இஷ்டமில்லாதவர்கள் எழுந்து போகலாம். உங்கள் பணங்களை வாபீஸ் செய்வதற்கு முடியாது' என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் வைதார்கள். இதைக்கேட்ட நமது நண்பர்கள் மனங்கலங்கிட அனைவரும் வெளியேறித்தத்தம் இல்லம் போய் சேர்ந்தனர்.

பிராமணீய கொடுமை

உலகத்தில் பஞ்சமாபாதகம் ஒழியவேண்டுமென்று எங்கு பார்த்தாலும் முழக்கம் ஏற்பட்டு வருகிறது. அப்படியிருக்க அப்பஞ்சமா பாதகத்தில் சேர்க்கையுள்ள காம வெறியை உண்டாக்கும் நாடகம் சொக்கருடைய ஆலயத்தில் நடைபெற்றது. பயபக்தியுடனும் நீதியுடனும் தரிசிக்க வேண்டியதை விட்டு கோவிலிலேயே பீடி சிகரட், சுருட்டு முதலியவைகளுடனே அவ்வூர் வாசிகளும் பிராமண குருக்களும் நாடகம் நடத்தினார்கள். இவ்வளவு நேர்ந்ததும் கோவில் தர்மகர்த்தாவாலேதான். இவர் குருக்களாயிருந்தால் சொந்த இடத்திற்கு அழைத்துப்போய் மெத்தை, ஜமுக்காளம், தலையணை முதலியவைகள் போட்டு காலில் விழுந்தால் இவரை யாராவது கேட்பார்களா? இந்த உணர்ச்சி ஏன் தொப்பை முதலியாருக்கு ஏற்படவில்லை என்றுதான் கேட்கிறோம்.

'இவ்வளவு நேர்ந்ததும் நம்மை சார்ந்தது தானே. நாம் ஏன் நோட்டீசில் கண்ட சட்டத்திற்கு விரோதமாக நடந்து கட்டிலில் இறுமாப்புடன் உட்கார்ந்திருக்கிறோம்' என்ற உணர்ச்சி குருக்களுக்கு ஏன் ஏற்படவில்லையென்றுதான் கேட்கிறோம்.

வி. ஏ. நாராயணசாமி நயினர்.


### ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிடிட், சௌகார்பேட்டை, மதராஸ்.



நாலு தலைமுறை பாரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

## குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்ற அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ
,, ,, நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.
பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூ அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

### சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S I.

சென்னைபிராஞ்சுஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை.


ஆத்தங்குடி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் அஷ்டபந்தன மகா கும்பாஷேகம்.

ஸ்ரீ மீனாக்ஷியம்பிகா சமேத ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரப் பெருமானுக்குத் விபவ வருஷ சித்திரை மாதம் 14 தேதி வியாழக்கிழமை உதயாதி 11 க்கு மேல் 12 நாழிகை யளவில் கும்பாபிஷேகம் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள்யாவரும் வரவேண்டுகின்றோம். ஆத்தன்குடி நகரத்தார்.


## இனாம்! இனாம்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டுப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துகொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ளாக்கி நடத்தக்கூடிய விதிகளை நமது சகோதரிகளுக்கும் தாய்மார்களுக்கும் விதித்து அவர்களின் செய்நன்றியை மறந்து அவர்களை நடத்துவது நியாயமல்லவென்று மனதின் கண் தோற்றாத வைதீக பிராமணர்களுக்கு மேல் நாட்டார்கள் நம்மை அடிமைகளாய் வைத்திருக்கின்றார்கள் என்பதுமாத்திரம் எப்படித்தோன்றுகின்றதோ தெரியவில்லை.

புருஷன் நடக்கவேண்டியனவும் செய்ய வேண்டியனவும் இன்னவை யென்று தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களாயும் உலக ஒற்றுமைக்கு ஏதுவான மார்க்கங்களைத் தேடமாட்டாதவர்களாயும் இருக்கிற நாம் பெண்களுக்குரிய விதிகளை சாஸ்திரம் கூறுவதாய் சொல்லி நமக்கநுகூலமாக சாதித்துக்கொள்ளுவது நியாயமற்றதல்லவோ. இதனால் சகலரும் சட்டசபையிலும் மற்றசபையிலும் விவாக வயது மசோதாவை ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றுமொரு முக்கிய விஷயம் என்னவெனில் ஆரியர்கள் புராதனகாலத்திலிருந்து வாழ்ந்து வருவதாய்ச் சொல்லிக்கொண்டு வருகின்றமையால் ஆதிகாலத்திலிருந்து இதுவரையில் பீடித்திருக்கும் ஒரு ஜாதியானது ஜனப்பெருக்கமடைந்திருப்பதைவிட்டுக் குறைந்திருப்பதற்குக் காரணம் பாலிய விவாகம் என்று நன்கு விளங்கவில்லையா.

---

## தூத்துக்குடி ஆதிதிராவிடர் யூனியன் நடவடிக்கைகள்.

11-3-28ல் தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கியசங்கத்திலொருகூட்டம் கனம் A. M. R. வில்சன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான சகோதரர்கள் விஜயமாகியிருந்தனர். தலைவரும் திரு. யா. இ. பால்வண்ணம் முதலியவர்களும் பேசினார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ராவ்பகதூர் யம். சி. ராஜா அவர்கள், ராவ் சாகிப் மதுரை பிள்ளை, கனம் சிவராஜ் பி.ஏ., சுவாமி சகஜானந்தம், ராவ்சாகிப் எம். எல். சி. குருசாமி முதலிய கனவான்கள் ஏழை ஆதிதிராவிட மக்களுக்காக கவர்மெண்டாரிடம் வாதாடி உரிமைகளைப்பெறுவதற்காக பூர்ண ஆயுள் கொடுக்க கடவுளை பிரார்த்திக்கிறோம்.

கொளும்பு கனம் சேம்ஜான் அவர்கள் சென்னை தஞ்சை, மதுரை முதலிய இடங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களின் குறைகளை ராயல் கமிஷனிடம் எடுத்துக் கூறி அதிக சிரமத்தை யெடுத்துக் கொண்ட செய்கைக்காக தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்ய சங்கத்தார் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறார்கள்.

சென்னை 'திராவிடன்' ஆசிரியர் ஜனக சங்கர கண்ணப்பர் அவர்கள் திருவண்ணாமலையில் நடக்கும் வழக்கு பூர்ண வெற்றியடைய வேண்டுமென்றும், 'குடி அரசுக்கும்' 'திராவிடனுக்கும்' நமது அங்கத்தினர் ஒவ்வொருவரும் சந்தாதாரராக வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசி.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் கலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இப்பத்திரிகையின் நன் மதிப்பு நம்நாட்டு ஜனங்களிடம் நன்கு பதிந்து விட்டபடியால் புகழ்ச்சியாக நாம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இவ்விரண்டு வருஷங்களாக இதற்கு வருஷ சந்தா இரண்டு ரூபாயாக இருந்தது. இந்த வருஷத்திலிருந்து இதை ஏழை முதல் எல்லோரும் படிக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுய மதிப்புக்காகவும். [illegible] எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப்பத்திரிகை இது ஒன்றே யாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அநுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன.

சற்று ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

பிரதி மாதமும் 48 பக்கங்களுடன் அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும் இந்த உயர்வான செந்தமிழ்ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்று தான் என்பதை யோசிப்பீர்களானால், லாபங்கருதி இப்பத்திரிகை அச்சிடப்படுகிறதில்லை என்பதும் தமிழ் நாடெங்கும் இப்பத்திரிகை உலாவ வேண்டுமென்ற பரோபகார எண்ணத்துடனேயே இது வெளிவருகிறதென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1—0—0. வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.

மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:—

"ஆனந்த விகடன்" ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், வீரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

# தாளகபற்பம்.

## இருமலுக்கு அனுபவத்தில் கைகண்டது.
## உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ. 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே விசப்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளியேறிக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் துர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கடம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சகதியில்லை. இந்த நிலைமையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். செல்லிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளக ஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும, இருமல், வாந்தி, கபம்விழுவதும், துர்வாடை வீசுவதும அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நலல நிலைமையிலிருக்கிறேன். தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுளள வியாதியில் போன உயிரைக காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். ப. வீரயலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்தமா என்பது தீராத ரோகம். அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரா சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டாலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதிர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்தமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூர்பத்மனுடைய சைமனயங்களும, சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலை நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிக்கெல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆர் கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்.

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,** சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

## தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடு.

—:0:—

### வரவேற்பு கழக 2 வது கூட்டம்.

18—3—28 மாலை 5 மணிக்கு மேற்படி கூட்டம் திருவாரூர் [illegible] கூடியது. சீர்காழி எம். சுப்பையா முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்.

மாயவரம், நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி, நன்னிலம், [illegible], சீர்காழி முதலிய ஊர்களிலிருந்தும் [illegible] அக்கூட்டத்திற்கு [illegible] விஜயம் செய்திருந்தார்கள்.

அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. மகாநாட்டிற்கு வரவேற்பு கழக தலைவராக திருவாளர் எஸ். கெ. சுப்பராயலு ([illegible]) அவர்களையும், [illegible] திரு. டீ. கோபாலசாமி முதலியார் (சேர்மன் திருவாரூர்) அவர்களையும், [illegible] தெரிந்தெடுக்கும்படி திரு. [illegible] அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் திரு. [illegible] பிள்ளை அவர்களால் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

2. பொக்கிஷதாரராக திருவாரூர் முனிசிபல் கௌன்சிலர் திருவாளர் டி. என். சபாபதி முதலியார் அவர்களை தெரிந்தெடுக்க திரு. [illegible] பிள்ளையால் கொண்டுவந்த தீர்மானம் திரு. ஆர். சந்தானம் பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

3. சொஸ்டர் படைத் தலைவராக நாகபட்டிணம் திரு. சாமிவேல் பிள்ளை அவர்களை தெரிந்தெடுக்கும்படி போருள்வைத்தசேரி மேற்குத்தெரு மகாஜன சங்கம் தலைவர் திரு. கந்தசாமி முதலியாரால் பிரேரபிக்க மாயவரம், திரு. சின்னையா பிள்ளையால் ஆமோதிக்க நிறைவேறியது.

4. மகாநாட்டின் தலைவராக திருவாளர்களான திவான்பகதூர் எஸ். குமாரசாமி செட்டியார் அவர்களையும், எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்களையும், வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்களையும், ஆர். கெ. சண்முகம் செட்டியார் அவர்களையும் இக்கூட்டம் சிபார்சு செய்திருக்கிறது.

5. மகாநாட்டை திறந்துவைக்கும்படி திராவிடன் ஆசிரியர் திரு. ஜலகண்டேச்வர கண்ணப்பர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

6. சுயமரியாதை கொடியை உயர்த்த திரு. மாயூரமணி ஆர். சின்னையா பிள்ளை அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்வதாய் நிறைவேறியது.

7. மகாநாட்டில் தமிழ்நாட்டு தனிப்பெரும் தலைவரும் சுயமரியாதை வீரர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் திருவுருவ படத்தை வைத்து திறப்புவிழா செய்ய சென்னை ஸ்ரீமதி மீனாம்பாள் பி. ஏ. எல். டி. அவர்களை கேட்டுக் கொள்கிறது.

8. மகாநாட்டுக்கு சீப் ஆர்கனைசராக சித்தாய்காடு திரு. ராமையா நாயுடு அவர்களை தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

9. திருவாளர்களான எஸ். வி. லிங்கம் பிள்ளை அவர்களையும், அழகிரிசாமி நாயுடு, சுவாமி சிதம்பரனார், திருஞானசம்பந்த முதலியார், ப. சு. தெண்டபாணி செட்டியார் இவர்களையும் விளம்பர அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

10. விவசாயம், கைத்தொழில், கதர் முதலிய வைகள் அடங்கிய கண்காட்சி ஒன்றை நடத்துவ தென்றும், அது காரிக்கு திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. சாமிநாத பிள்ளை அவர்களை தலைவராகவும் கொண்டு நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

11. மகாநாட்டை மே 12, 13 தேதிகளில் திருவாரூரில் நடத்துவதென்று முடிவு செய்யப் பட்டது.

(a) வரவேற்பு கழக கட்டணம் ரூ. 5—0—0.
பிரதிநிதி கட்டணம் ரூ. 1—0—0.
விசிட்டர் கட்டணம் பெண்களுக்கு
உள்பட ரூ. 0—4—0

என்று தீர்மானித்திருக்கிறது.

(b) பெண்களும், தாழ்த்தப்பட்டவர்களும், இலவசமாக அனுமதிக்கப்பட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு வந்தனம் கூறப்பட்டு இரவு ஏழரை மணிக்கு கூட்டம் கலைந்தது.

### சுயமரியாதை தொண்டர் மகாநாடு நடத்த தீர்மானம்.

இதே கூட்டத்தில் சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டை நடத்துவதென்றும், அதற்கு வரவேற்புக்கழக தலைவராக சீர்காழி திரு. எம். சுப்பையா முதலியாரவர்களும் காரியதரிசியாக காசவூர் திரு. நா. வி. கல்யாண சுந்தரம் பிள்ளை அவர்களும் அம்மகாநாட்டின் தலைவராக கோகலே ஹால்வீரர் திரு. என். தெண்டபாணி பிள்ளை அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

V. S. இராமன்,
மகாநாட்டு காரியதரிசி.

[illegible]ம் பக்கத் தொடர்ச்சி.

விடைசெய்தான். அவன் அவளுக்கு வேண்டிய தீ, பழம், கரும்பை முதலியவைகளைக் கொடுத்தான். அவன் அவளுக்குச் சிரமத்தைப் போக்கும்படி யானை கட்டிப் பிடித்தல் முதலிய பணிவிடையாவும் எல்லாவற்றிலும் செய்து கொண்டிருந்தான். அவள் தவம் முடியப் பத்து ஆண்டுகளிருக்கும் போது [illegible] பத்து ஆண்டு [illegible]. அவன் உன்னை வெல்வதிலேயே எல்லா [illegible] உன்னோடு ஒற்றுமையாயிருக்கும்படி சொல்வேன். அஞ்சேல் நீ சீர் வாழ்க' என்றனள். ஓர் நாள் அவள் நடுப்பகலில் தலை மாட்டில் காலை வைத்துத் தூங்கினாள். அவள் தலைமாட்டில் காலும் கால் மாட்டில் தலையுமாகப் படுத்துத் தூங்கினதால் ஒழுக்கந்தவறிய வளாயினள். அது கண்டு இந்திரன் அவளுடைய கருவை அழிக்க நல்ல தருணமாயிற்றென மகிழ்ந்தான். அவன் அவளுடைய பெண் குறிவழியாக உள்ளே புகுந்து கருப்பத்திலிருந்த குழந்தையை ஏழு துண்டுகளாக அறுக்கத் தொடங்கினான். அக்குழந்தை அழத்தொடங்கிற்று. அதனால் திதி விழித்துக்கொண்டாள். இந்திரன் அழவேண்டாம் அழவேண்டாம் என்று சொல்லி கொஞ்சமும் மனமிரங்காமல் மிக்க களிப்போடும் அதைத் துண்டித்து விட்டான். பின் இந்திரன் பெண் குறிவழியாக வெளியே வந்து விட்டான். அந்த ஏழு துண்டுகளும் ஏழு மருத்துக்களாயின. இது தான் திதியின் கருவை இந்திரன் அழித்த இடம். வெகு காலத்தின் பின் விசாலன் என்ற ஓர் அரசன் இவ்விடத்தில் விசாலை என்ற ஒரு நகரை உண்டாக்கினன். அந்நகரே இது. இதில் அம்மன்னவனின் வழியில் வந்த சுமதி என்ற மன்னன் அரசாள்கிறான்" இவ்விதமாகக் கோசிக முனிவன் கூறினன். இவர்கள் வந்திருப்பதைக் கேள்வியுற்று சுமதி எதிர்கொண்டு உபசரித்தான். அவ்விசாலா நகரத்தில் அன்றிரவைக் கழித்து விட்டு மறுநாள் விசுவாமித்திர முனிவனும் அரசகுமாரர்களும் மிதிலை நகருக்கருகே உள்ள ஓர் பூஞ்சோலையை யடைந்தார்கள். மேலே கண்ட வரலாற்றை பின்னர் ஆராய்வோம்.


## விபவ வருடத்திய சுயமரியாதைப் பஞ்சாங்கம்.

சென்ற வருடம் போலவே இவ்வருடமும் சுயமரியாதைப்பஞ்சாங்கம் அச்சியற்றி வருகிறோம். பார்வைக்கு மிக்க அழகாக நான்கு வர்ணங்களில் சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றப் பெறுகின்றன. இதில் சித்திரை முதல் பங்குனி முடிய 12 மாதங்களுக்கும் பனிரண்டு தாள்கள் தனித் தனியே அச்சியற்றி நமது மாபெருந்தலைவர் வைக்கம் வீரமூர்த்தியின் பெரிய திருவுருவம் 6 அங்குல அளவில் அச்சியற்றிய நல்ல பளபளப்பான அட்டையின் கீழ் சேர்க்கப்பெற்றது. மேல் அட்டையில் நமது இயக்கத்தின் முக்கிய கொள்கைகளை அச்சியற்றி யிருப்பதோடு 12 மாதங்களிலும் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய வாக்கியங்களையும் சேர்த்திருக்கின்றோம். சென்ற வருடத்திய வாக்கியங்கள் முழுதும் எடுக்கப்பெற்று இவ்வருடம் வெவ்வேறு வாக்கியங்களைப் பொறித்திருக்கின்றோம். வழக்கம் போலவே, தமிழ் தேதி, ஆங்கில தேதி, திதி, வாரம் நட்சத்திரம், அமிர்தாதி யோகங்கள், இராகு, குளிகை, வார சூலை முதலியவைகள், விரத நாட்கள், பண்டிகை முதலிய விசேஷ தினங்கள் யாவும் விளக்கமாக இப்பஞ்சாங்கத்தின் மூலமாய் நன்கறிந்து கொள்ளலாம். நமக்கு அதிக விலை அடக்குகிறது. ஆனாலும் சுயமரியாதைப் பிரசாரத்தின் நோக்கமாக அணா இரண்டிற்கே கொடுக்க நிச்சயித்து விட்டோம். ஆங்காங்குள்ள நமது சுயமரியாதை வீரர்கள் வரவழைத்து தங்கள் தங்கள் ஊர்களில் பரவச்செய்து பெரும்பலனடைய வேண்டுகின்றோம். 15—4—28-க்குள் கிடைக்கின்ற ஆர்டர்களுக்கு மட்டுமே காலண்டர்கள் அனுப்பமுடியும். விலை அணா 2. வி. பி. செலவு வேறு. கி ஆ பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சி.

---

### வைக்கம் வீரரன்

## போட்டோ படம்.

வைக்கம் வீரர் ஈரோடு உயர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் திருஉருவப் புகைப்படம் கெம்பீரமான பார்வையுடன் விளங்குவது. பார்ப்பவர்கள் கண்களை கவரச்செய்யும்.

சயிஸ் $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ இஞ்சி. விலை படம் 1-க்கு வி. பி. தபால் சார்ஜ் உள்பட ரூ. 1. ஒரு டஜன் அல்லது அதற்கு அதிகமான காப்பிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் காப்பி 1-க்கு அணா 12 வீதம் சார்ஜ் செய்யப்படும். அதற்கு அட்வான்சாக ரூ. 5 முன்னடி அனுப்பவேண்டும். என்லார்ஜ்மெண்டு அதாவது மிகப்பெரிய படம் வேண்டுவோர் கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதி விபரம் தெரிந்து கொள்ளவும்.

G. V. நாயுடு,
போட்டோகிராப்பர்,
நாகபட்டணம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

மும், சமூகத்தொண்டும் நிறைந்திருக்கின்றன வென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஒவ்வொரு மதங்களில் உள்ள நன்மையான கொள்கைகள் எல்லாவற்றையும் நாம் போற்றுகின்றோம்; ஒப்புக்கொள்ளுகின்றோம். பின் பற்றவும் முன்னிற்கின்றோம்.

மதத்தின் வாய்ப்பட்டு மயங்காதார் உலகில் எவருமில்லை. எல்லோரையும் கலங்கச் செய்யுந் தீமை மதங்களில் அமைந்து கிடக்கின்றது. கற்றுத்தேர்ந்து உலக இயல்பை நன்றாக அறியும் அறிஞர்களும், மதப்பேயினால் பிடிக்கப்பட்டு மயக்கமடைவதைக் காணலாம். எல்லா மக்களும் உடன்பிறந்தோரே என்றெண்ணுகின்றவர்கள் மதக்கொடுமையால் மற்றவர்க்குத் தீங்குசெய்ய முயல்வதைக்காணலாம். எல்லார் மாட்டும் அன்பு செலுத்த வேண்டும் என்ற நோக்கமுடையவர்களும் மதச்சார்பினால் அன்பு செய்வதைப் பார்க்கலாம். இதற்குச் சில உதாரணங்கள் காட்டுகின்றோம். அன்பையே கடவுளாகப்போற்றும் மாணிக்கவாசகரைப் பாருங்கள்! "புற்றிலுறையும் கொடிய பாம்பிற்கும் அஞ்சமாட்டேன். பொய்யர்களின் மெய்க்கும் அஞ்சமாட்டேன். ஆனால் மற்றுமொரு தெய்வம் உண்டு என்றெண்ணிச் சிவபெருமானை வணங்காதவர்களைக்கண்டால் நாம் பெரிதும் அஞ்சுவோம் என்று கூறுகின்றார். இதனை

"புற்றில் வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வாழ் சடையெம் மண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்று'மோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந் தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சு மாறே"

என்பதனால் அறியலாம். இது போன்ற பாடல்கள் பலவற்றைத் திருவாசகத்திற் காணலாம்.

சிலர்.

"ஆங்க மெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே".

என்ற திருநாவுக்கரசர் பாடலைக்காட்டிச் 'சைவமதத்தில் கொடுமையில்லை. சமரசம் பெருக்கெடுத்தோடுகிறது' என்று கூறுவார்கள். அந்த அன்புதானும் சைவ மதத்தை மேற்கொள்வோர்களிடம் மட்டிலும் செல்லுகின்றதை ஊன்றி நோக்கியறிலாம். எல்லா மக்களிடமும் அன்பு செலுத்துந்தன்மை எங்கிருக்கின்றது? திருநாவுக்கரசரே தமது பாடல்களிற் பல விடங்களில் பிறமதத்தினரைக் கடிந்து கூறியிருப்பதைக் காணலாம். இது போலவே வைணவ ஆழ்வார்களிடமுங்காணலாம். பெரியாழ்வார் "ஒழுக்கங்கள் அமைந்த நான்கு சாதிகளினுங் கீழ்ப்பட்ட நன்மையில்லாத சண்டாளர்களிலும் சண்டாளர்களாயிருந்தாலும் வெற்றி பொருந்திய சக்கரப் படையையுடைய திருமாலுக்கு ஆட்பட்டு அவரைத் தம் மனத்துட் கொண்ட அடியார்களுக்கு அடியாராயிருப்பர் எமது அடிகளாகிய திருமால்" என்று கூறுகின்றார். இதனை

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து
எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்
காளென்றுள்
கலந்தார் அடியார் தம் அடியார் எம் அடிகளே"

என்பதனால் அறியலாம். இவரது அன்பும் வைணவர்களிடம் மட்டும் செல்லுகின்றதே யன்றி மற்ற மக்களிடம் சிறிதேனும் செல்லவில்லை யென்பதை யறியலாம். வைணவர்களல்லாதவர்களைச் சண்டாளர்களினும் இழிந்த சண்டாளர்களென்று கருதுகின்றாரன்றோ? ஆகிய மதத்தலைவர்களிடம் காணப்படும் அன்பைக் குறுகிய அன்பென்று தான் கூறலாம். பரந்த அன்பென்று கூறவியலாது. விலங்குகளிடமும் பறவைகளிடமும் அன்பு செலுத்தும் மக்கள் தம் போன்ற மக்களிடம் அன்பு காட்டாது வெறுப்புக் காட்டுவதற்குக் காரணம் பொல்லாத பாழும் மதமன்றோ? அறிவுடைத்த மக்களே! தெய்வ சக்தியுடையவர்களென்று நினைக்கப்படுகின்றவர்களும் கடவுள் அவதாரம் என்று கருதக்கூடியவர்களும் மதத்திமிரினால் பகுத்தறிவு மறைக்கப்பட்டு உண்மையுணராமலிருப்பார்களாயின் ஒன்றுமறியாப் பாமரமக்களுக்கு மதங்கள் இழைக்கும் கொடுமையை அளவிட்டுக் கூறவல்லார் யார்?

ஆனால் கடவுள், ஒருவரே யென்றும், எல்லா மக்களும் ஒத்த தன்மையரே என்றும், யாவரிடமும் அன்பு செலுத்த வேண்டுவதே கடவுட்பணியென்றும், எல்லா மதங்களும் ஒப்புக்கொள்கின்றன. எல்லா மதத்தலைவர்களும், வாயளவில் ஒப்புக்கொள்கின்றனர். இவை எல்லா மத நூல்களிலும் இலைமறை காய் போல் அமைந்திருக்கக் காணலாம். இருந்தும் 'தமது தெய்வமே தாம் உண்டாக்கிய தெய்வமே உயர்ந்தது' என்று நினைக்கின்ற ஒன்றினாலேயே எல்லா நன்மைகளும் இருக்குமிடந்தெரியாமல் மறைகின்றன. கடவுளின் பெயரால்,--தமது மதத்தெய்வத்தின் பெயரால்--மூட நம்பிக்கையும், குருட்டு பக்தியும், பிறர் கொள்கையில் வெறுப்புங் கொண்டு ஒருவரோடொருவர் வீணாக வேற்றுமை பாராட்டிச் சண்டையிட்டுத் துன்புறுகின்றனர். இதனால் மதங்களின் பேரால் வேறு பாடுகள் ஒழிந்தாலன்றி மக்களின் வேறு பாடுகள் ஒழியாதென்பது உறுதியும் உண்மையுமாகும்.

மேற் கூறிய காரணங்களால் மதம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் முட்டுக்கட்டையாக விருப்பதை யறியலாம். மதமே மக்களின் ஒற்றுமைக்கு விலங்காகக் குறுக்கே நிற்பதையுணரலாம். மதமே பரந்த அன்பைப் பரவவிடாற் றடுத்து நிற்கின்ற தென்பதைக் காணலாம். ஆகவே மக்களூழியத்திற்குத் தடையாக விருப்பது மதமென்பதில் ஐயமில்லை. மக்கள் ஊழியம் புரிய வேண்டுமாயின் மதக்கொடுமைகளை யொழிக்க வேண்டும். மக்களின் பகுத்தறிவிற்கு உரிமையும், மதிப்பும் கொடுக்கவேண்டும். மக்களை வரும் மதமென்னும் இருளிலிருந்து பகுத்தறிவென்னும் ஒளிபுலகிற்கு வரவேண்டும். போலிவேடங்களைப் புனைந்து கொண்டு மக்களை ஏமாற்றித் திரியும் வஞ்சகர்களின் செல்வாக்கைச் சிதற அடிக்கவேண்டும். கண்டிகை தரித்துத் திரு நீறு பூசி, காவித் துணியுடுத்துச் சடை வளர்த்து, அல்லது மொட்டையடித்துப் பல்லக்கேறி குருமார்களென்று கூறிக்கொள்ளும் கொடியவர்களின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டும். அத்தகையவர்களுக்கு வணங்குதலை நீக்க வேண்டும். இவர்கள் இவ்வாறு ஏமாற்றுவதற்குக் காரணம் மதமேயன்றோ? நான் தான் உலக குரு வென்று கூறிக்கொண்டு ஆடம்பரத்துடன் வெளியிற் சென்று, பணம் பறிக்கும் பாதகர்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்க வேண்டும். மதத்தின் பெயரால் சாதிப்பூசல்களுக்கும், சமயப்பூசல்களுக்குங் காரணமாக விருக்கின்றவர்களுக்கு நாட்டில் மதிப்பில்லாமற் செய்யவேண்டும். இத்தகைய போலி மக்களிடம் ஒன்றுந்தெரியாத மக்கள் தங்கள் பொருளையுங் கொடுத்து மானத்தையும் இழக்கின்றார்கள். எல்லா மக்களும் மானத்துடன் வாழவேண்டுமாயின் இப்பொழுது காணப்படும் மதக்கோட்டைகளை உடைத்தெறிய வேண்டும். ஏனெனில் இப்பொழுதுள்ள மதக் கோட்டைக்குள்ளிருக்கும் மாளிகைகளிற் சுயநலம், சூழ்ச்சி, கொடுமை, ஏமாற்று, மூடநம்பிக்கை ஆகிய பாம்பும், தேளும், கட்டுவாக்காலிகளும் குடிகொண்டு மக்கள் வாழ்வதற்குத் தகுதியில்லாமலிருக்கின்றன. மாளிகைகளின் சுற்றுச் சுவர்களும் பாழ்பட்டு இடிந்து விழும் நிலையிலிருக்கின்றன. இவ்வாறு பாழடைந்துள்ள சிறு சிறு மதக்கோட்டைகளினின்றும் மக்களை வெளியேற்றவேண்டும். இவ்வளவு நாள் அக்கோட்டைகளில் வாழ்ந்து பெற்ற பயன் போதும். இனி 'குலமும் ஒன்றே குடியும் ஒன்றே, வழிபடு தெய்வமும் ஒன்றே' (கபிலர்) என்ற மாளிகை வரிசைகளமைந்த அழகான பெரிய கோட்டைக்குள் எல்லா மக்களையுஞ் செலுத்த வேண்டும். இக்கோட்டைக்குள் நுழைந்தால் தான் எல்லா மக்களும் இன்பம் எய்த முடியும். உலகில் உள்ள சாதிச் சண்டைகளும் மதச் சண்டைகளும் மாண்டொழியும். இவ்வழியில் அறிஞர்கள் புகுந்து வேலை செய்யவேண்டும்.

மதக்கொடுமையினின்றும் விடுபட வேண்டுமென்று விளம்புதலால்--மத விலங்குகளை முறித்தெறிய வேண்டுமென்று மொழிவதனால்—மதச் சிறையிலிருந்து வெளியேற வேண்டுமென்று கூறுவதனால்—உண்மையை நாடிச் செல்ல வேண்டுமென்று உரைப்பதனால்—மதத்தலைவர்களாலும், மதப்பற்றுடையவர்களாலும் பல இடையூறுகள் நேருவது இயற்கையே. அவற்றை யெல்லாம் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. நாம் நமது பணியை அன்புடனும், பொறுமையுடனும், அமைதியுடனும், ஆற்றிச் செல்லவேண்டும். அவ்வகையில் நம் முயிர்க்குத் தீங்கு நேரினும் அஞ்சுதல் கூடாது. மானத்தைவிட உயிர் பெரிதன்று. 'மானங்கெடவரின் வாழாமை முன்னினிது' என்பது ஒரு தமிழறிஞரின் மொழியாகும். நாம் போகும் நெறி உண்மை நெறியாகும். உண்மை நெறியே உயர் நெறியாகும். உண்மை நெறியே நன்மை தருவதாகும். உண்மைக்கு என்றும் அழிவில்லை. உண்மையும் இன்பமும் உலகில் ஓங்க உழைப்போம். அதன் பொருட்டு உயிர் விடவும் முன்னிற்போம்.

---


## ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கேட்லாக் இனாம்,

## ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாதுபுஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. நாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். மந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தனை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை,

வலங்கைமான் போஸ்டு,

தஞ்சை ஜில்லா.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் பெண்டிரையும் வாங்கும்படி தூண்டுகிறார். ஆகவே இப்புத்தகத்திலுள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

இல்வாழ்க்கை நல் வாழ்வாக

நடத்த உதவிசெய்யும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.


மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடம் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுகிறீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமது விலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதராஸ்.





(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும், நாங்கள் எப்படி அவர்கள்போல் இருக்க முடியும், அவர்களைப்போல் நாங்களுமிருந்தால் குருநிந்தை வந்துவிடும், சிவபெருமானைக்காண கயிலாயத்திற்கு வந்திருந்த கூட்டத்தில் குபேரனையும், சுந்தரமூர்த்திகளையும் உள்ளேவிட நந்தியிடம் சொல்ல, நந்தியும் அது தெரிந்து இரண்டு பேர்களையே உள்ளே விட்டார். இதன் ரகசியமென்னவென்றால் பணக்காரனான குபேரனும், தன்னையே பெருமைப்படுத்திப் பாடும் சுந்தரமூர்த்தியான தன் கையாளும் வேண்டுமென்பதே. சிவபெருமானே அப்படி நடந்திருக்கையில் அதைவிட்டு நாங்கள் வேறு எப்படி நடக்கமுடியும்' என்று சொல்லுகிறார்கள்.

விஷ்ணுவிற்கு சிவன் ஒரு முறையில் மைத்துனன், இன்னொரு முறையில் பேரன், இன்னொரு முறையில் வாகனம். சிவனுக்கு விஷ்ணு ஒரு முறையில் பெண்ஜாதி, இன்னொரு முறையில் ஒரு தேவன், பின்னொரு முறையில் பக்தன். பிர்மாவிற்கு விஷ்ணுவும், சிவனும் ஒரு முறையில் பிள்ளைகள், இன்னொரு முறையில் தகப்பன். இவ்வளவு பந்துவான தெய்வங்களும் அவர்களுடைய மதங்களும் சகோதரத்தன்மையை அடையவில்லையென்றால் பின் வேறு மதங்களைப்பற்றி கேட்பானேன். முகமது மதத்தினரின் சடாவின் கிருக்குச் சுக்கத்திற்கும், கிருஸ்துவ மதஸ்தர்களின் டக், டக் என்னும் பூட்சு சத்தத்திற்கும் இவை இரண்டும் சேர்ந்த தாளத்திற்கும் நம் வேத ஆகம பாராயண சாத்திரத்திற்கும் சம்மந்தம் உண்டு. அதனால் சிறிதாவது சகோதர பாவனை காட்டுகிறோம். தாழ்த்தப்பட்ட இந்த மதஸ்தர்களிடம்

## திருச்செங்கோடு உபாத்திமை சங்கத்தில்

# பார்ப்பன பிரசாரம்.

17-3-28-ல் திருச்செங்கோடு போர்டு எலிமெண்டரி பாடசாலைக் கட்டடத்தில் ஷை சங்கம் நடைபெற்றது. அன்று தெய்வபக்தியைப்பற்றி வியா

அந்த நாசக்கியானமில்லை. அது வந்துவிட்டால் சகோதரத்துவம் சிறிதாவது நம்மால் கொடுக்க முடியும்.

எட்டில், எங்கோ ஒரு மூலையிலும், வேதத்தின் உள்ரகசியத்திலும், ஆசாரிகள் அந்தரங்கத்திலும், சகோதரத்துவமிருக்கலாம் அதைப்பற்றி 'குடி அரசு' கேட்கவில்லை. அநுபோகத்தில் என்ன இருக்கிறது? மதப்பேராலும் கடவுளைக் காட்டியும் நடக்கும் கொடுமைக்குப்பரிகாரமென்ன? இவையனைத்தும் ஒழிந்தால்தான் நாமும் நாலுபேரைப்போல் வாழமுடியுமென்றே 'குடி அரசு' சொல்லுகின்றது. நம்முடைய கடவுளும் ஆசாரமும், அநுஷ்டானமும், மதமும் எவ்வளவு விசேடமுடையதாயிருந்தாலும் எந்த மார்க்கட்டிலும் லாபத்திற்கு விற்பதில்லையே. நாளுக்குநாள் னை முதல் சுருங்குகிறதே. நாலுபேரைப்போல் வாழமுடிகிறதில்லையே. நாமும் மனிதனில் மனிதனாக வாழவேண்டுமானால் மதப்போரால் வித்தியாசப்படுத்தும் எல்லாக் கொள்கைகளையும் கூசாமல் வீசி எறிந்துவிட்டு, காமால்பாஷா, லெனின், முஸோலினி முதலிய உலக மேதாவிகளின் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றே நாயக்கரவர்கள் பிரசாரம் செய்கிறார்.

தொடரும்.

சம் நடந்தது. இரண்டு நண்பர்கள், பழய சங்கதிகளையும் பார்ப்பனக் கட்டுக்கதைகளையும் பேசினார்கள்.

பின் திருச்செங்கோடு தாலூகா ஆதிதிராவிட சபையின் காரியதரிசி திரு. கே. எஸ். கந்தசாமி அவர்கள், தலைவரவர்களுடைய உத்திரவின்பேரில், இந்து மதத்திலுள்ள ஊழல்களைப்பற்றியும், தீண்டப்படாதவர்களை ஆலயங்களில் விடாததைப்பற்றியும் உண்மையான கடவுளை வணங்கும் முறைகளைப்பற்றியும், ஓர் பிரசங்கம் நடத்தினார்.

பின் ஒரு அய்யரும், இரண்டு பிராமணரல்லாதாரும், அதற்கு எதிர்மாறாக சில பேச்சுகள் பேசினார்கள். அவைகளுக்குத் தகுந்த விடை சொல்ல தலைவரை விடைகேட்க, நேரம் இல்லாமையால் தலைவர் விடைகொடுக்க மறுத்துவிட்டார். இந்து மதத்திலுள்ள ஊழல்கள் முற்றிலும் உண்மையென்று உணர்ந்தவரும், 'குடி அரசு' பத்திரிகையைப் படித்து வருபவருமான கனம் அர்த்தநாரி நாயுடு அவர்கள் சங்கத்திற்கு ஒரு 'குடி அரசு' பத்திரிகை வரவழைக்க வேண்டுமென பிரேரேபணை கொண்டுவர அதை எல்லோரும் ஆமோதித்து சங்கத்திற்கு வரவழைப்பதாக தீர்மானமாகிவிட்டது.

ஷை பத்திரிகையை எல்லா மெம்பர்களும் ஊன்றி வாசித்து தங்களிடத்திலும் தங்கள் சமூகத்திலும் பார்ப்பனப் பிரசாரத்தால் படர்ந்திருக்கும் மூடநம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் களைந்தெறிய வேண்டுமாக மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பி. ராமசாமி பிள்ளை,

ஆதிதிராவிட, கோக்களை, வையப்பமலை போஸ்டு.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)




தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சுலபமானதும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—3—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்



## அறிக்கை.

### ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி எக்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவாலடி 8 லடி எக்கு ஜரிகை மார்க்குகளும் ஜூதப்பட்டு காயிர்கட்டின அதிக எக்குள்ள கம்பி மக்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி திணுசுகளில் வேஷ்டி 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சுற்றும் ஜரிகை குமால்களும் டை நெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான கலர் கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும் பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேல்லி சிகப்பு ஜூஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்களையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் டை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை திணுசுகளும் பேட்டா திணுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,

ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.



இனாம்! **1928** இனாம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928வருஷ காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றி தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,

போஸ்டு முல்லைச்சேரி, மலபார்.



### "அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனாம்.

'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை



அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற

### விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள். கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, சேட்லாக் இனாம் இங்கிலீஷ் காய்கறி புஷ்பவிதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட்நாசன் தோட்டம், மசூலம்.



பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. | 15. |
| 2. | ,, | ,, | | 12. |
| 3. | ,, | ,, | | 10. |
| 4. 5 | ,, | 2½ | ,, | 8. |
| கம்பளித் தொப்பி நெ. 1. | உருப்படி 1-க்கு | | | 3-8-0 |
| டை | 2 | டை | | 2-8-0 |
| ,, | 3 | ,, | | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.



## தமிழ்ப் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,

விநாயகர் தெய்வம்மன் கோவில் வீதி,

புதுச்சேரி.



டிடக்டாஸ்கோப்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம்.



உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால் தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் டை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.



நாவல் உலகத்தின் ஒளி,

## ஸ்ரீவோவன்

ஓர் அரிய இனிய அபூர்வ

### துப்பறியும் நாவல்,

**விலை ரூ. 1-4-0.**

விலாசம்:—

T. S. ராஜம் & சன்,

காஞ்சீபுரம்.



## நிசவுகாரர்களுக்கு.

சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் நிசவு வேலை செய்யும் கை மிஷின் தறிகளுக்காக வேண்டி ஸ்பெஷலாக சீமையில் இருந்து எங்களுக்காகவே தயாரிக்கப்பட்ட (Shuttles) நாடா வந்துவிட்டது. ஸ்வல்ப ஸ்டாக் மட்டும் வந்திருப்பதால் உடனே வாங்கி ஆனந்த மடையுங்கள். மற்ற விவரங்களுக்கு (Sole Agent) விலாசத்திற்கு எழுதவும்.

அ. ஆ. ந. அ. ப. ஆத்தநாரி செட்டி,

ஷாப், ஜலகண்டாபுரம்,

(சேலம் ஜில்லா).

# 1928 இந்துசமயக் காலண்டர் 1928

## ஒரேகாலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.